இவர் தன்குலத்திற் பிறந்த அழகும், நல்லொழுக்கமும் பொருந்தி ஓர் பெண்ணை மணஞ் செய்து வாழ்ந்துவரும் நாளில் இவர் கல்விமுயர்ச்சியிலேயே காலங்கழித்துக்கொண்டு பொருள்தேடும் உபாயங்களை மறந்திருந்தமையால், தமது முன்னோர் சம்பாதித்து வைத்த பொருள்களெல்லாம் நாளுக்கு நாள குறைந்து கடைசியாய் வறுமை மேலிட்டுக்கொண்டே வந்தது. இவ்வாறு மேலிட்ட வறுமைக்காக இவரது மனைவியானவள் சற்றேனும் மனம் வருந்தாமல்,

"கல்லா வொருவன் தோள் சேர்தலினும்
கற்றவனோடு அல்லற்படுத லழகன்றே."

என்றபடி தனது கணவனது கல்வியையே பொருளாய் மதித்து, அவ்வூரிலுள்ள கனவான்களுடைய வீடுகளுக்குத் தினந்தோறும் போய், நெல் குற்றிக் கொடுத்து, அதற்காக அவர்கள் கொடுக்கும் கூலியரிசியை வாங்கிக்கொண்டு வந்து சமைத்துத் தன் பத்தாவிற்குப் பசிபாற உண்ணச் செய்து பின் தானும் உண்டு, இவ்வாறே வறுமையினால் உண்டாகும் துன்பத்தைப் புலவர் அறியாதபடி காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தாள். புலவரோ உலக இன்பங்களெல்லாவற்றிலும் கல்வியாராய்ச்சியிலே ஊண்டாகும இன்பமே பெரிது என்று அதிலேயே தன் சிந்தையை முழுதும செலுத்தியிருந்தார். இவ்வளவு மனவுறுதியோடும், பதி பக்தியோடும் அவருடைய மனைவியானவள் தன் கணவனுக்கு எவ்விதமுனவருத்தமும் உண்டாகாமற் பாதுகாத்து வரும நாளில், ஒருநாள் அவருக்கு ஏதோ நோய் உண்டாயிற்று. அதையும் அவர் சிந்திக்காது அன்றும் வழக்கம்போல நெல்லைக்குற்றிக் கொடுத்து அதனால் கூலியாய்க் கிடைத்த அரிசியைக் கொண்டுவந்து சமைத்துவிட்டு, உப்பும் எடுத்துவைப்பதற்காக உப்புவைக்கும் பாத்திரத்தை எடுத்தார். அதில் உப்பில்லாதிருந்ததைக் கண்டு இரம்பிய மனக்கவலையுடன்தன் பத்தாவிற்கு எப்படி அன்னை மழிப்பதென்று சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது அவமூர்ச்சையாய் தரையில் விழுந்துவிட்டார்.

அது சமயம் புலவரும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அப்போ தன் மனைவி தரையில் யாது காரணமாக விழுந்து படுக்கிறாள் என்று திடுக்கிட்டு ஓடிவந்து தன் மனைவியைத் தூக்கி மூர்ச்சை தெளியச் செய்து பின் அவரை உனக்கு என்ன காரணத்தால் இவ்வித களைப்பு உண்டாயிற்று என்று கேட்டார்.

அதற்கு அந்தக் கற்பரசியானவள் என் பிராணநாதா! சில நாட்களாய் எனக்கிருந்த நோயின் களைப்பேயன்றி வேறு ஒன்றுமில்லை வென்றாள். இதை நம்பாமல் சமையல் வீட்டைப் போய்ப் பார்த்தார். உடனே அவர் தன்மனைவி தினந்தோறும் படுங்கஷ்டங்களையெல்லாம் குறிப்பாலுணர்ந்து "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்னும் நாயனார் மொழிப்படி, இனி இல்லறம் நடத்துவதற்கு நாம் பொருள்தேடாவிடில் நம் உயிர்த்துணையாகிய மனைவியை இழக்க நேரிடும் என்று பயந்து தன் மனைவியை யழைத்து நீ எனக்காக இதுவரையில் பட்ட கஷ்டங்களை யான் அறியாமற் போனேனே. இனி நான் உனது துன்பத்தைப் பார்த்துச் சகியேன். நமது குடித்தன நிலைமை யிவ்வாறு யிருக்கின்றது என்பதை முன்பே அறிவியாது விட்டுவிட்டாயே. கல்வியாராய்ச்சியில் காலத்தைப் போக்கிவிட்டு நமது உணவுக்குத் தேவையான பொருளைத் தேடும் வகையைச் சிறிதும் ஆராயாது விட்டேனே என்று சொல்லி இரம்பிய கவலை கொண்டார்.

மதுரையில் அரசாட்சி செய்யும் பாண்டிய ராகன் கல்வியில் மேம்பட்டவன் என்றும், அவனிடம் போகும் புலவர்களுக்கு தகுந்த பரிசு கொடுத்து ஆதரிக்கிறான்

னென்றும், தான் முன்னால் கேள்வியுற்றிருந்த படி அவனிடம் போய்த்தனது கல்வியின் பெருமையைக்காட்டிப் பரிசு பெறலாமென்றும் நினைத்து உடனே புலவர் மதுரையை நோக்கிப்புறப் பட்டார். இவ்வாறு சென்ற புலவரானவர் நெடுந் தூரஞ் சென்று மதுரைப்பட்டணத்தை அடைந் தார். அங்கு இரண்டு மூன்றுநாள் வரையிலும் அந்த இராசனைக்காணுது இரம்பவும் மனவருத் தமுற்று இருந்தார். உண்ண உணவும் உடுக்க வேறு வஸ்திரமு மின்மையால் வருந்தி அன்றி ரவு அப்பட்டணத்து இராசவீதிகளிலுள்ள தேர டியில் படுத்துக்கொண்டு, நாம் இந்த நிலைமையில் அரசனை எவ்விதங் காணப்போகிறோம். என் மனைவியை இதுவரை காலமும் விட்டுப் பிரிந்த தில்லையே இப்போது விட்டுப் பிரிந்ததை நினைத்து அவள் என்ன செய்கிறாளோ என்று கவலையுடன் நித்திரையுமில்லாமல் விழித்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஆகாயத்தில் ஓர் ஆண்நாரைப் பட்சியானது தனக்கு நேராய்க் கத்திக்கொண்டு தெற்கேயிருந்து வடக்கே பறந்து போவதைக் கண்ட புலவரானவர், அந்நாரையை நோக்கி (நாரீர், நாராய் செங்கால் நாராய், பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன, பவளக்கூர்வாய்ச் செங்கால் நாராய் நீயுநின் துணைவியும், தென் றிசைக் குமரியாடி வடதிசைக் கேகுவீராயின், எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட் தங்கி, நனை சுவர்க்கூரை கனை குரற்பல்லிபாடு பார்த்திருக் குமென் மனைவியைக் கண்டு எங்கோன்மாறன் வழுதிகூடலில், ஆடையின்றி, வாடையின் மெலிந்து, கையது கொண்டு மெய்யது பொத்திக் காலதுகொண்டு மேலது தழீஇப், பேளையுள்ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும் ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.)

என்னும் இக்குறள் அகவற் பாவைச் சொன்னார். அதாவது:—சிவந்த காலையுடைய ஓ! நாரைப்பட்சியே, பழம் பழுக்கும் பனையின் கிழங் கைப் பிளந்ததைப் போலவும் பவளத்தைப் போற் சிவந்தும் கூர்மையுள்ள வாயையுடைய, நாரைப் பட்சியே! நீயும், உன்மனைவியும், தென்றிசையி லிருக்கும் கன்னியா குமரியில் நீராடி, வடதிசைக் குத் திரும்பும்போது சத்தி முத்தமென்னும் எம தூரிலுள்ள தடாகத்திற் தங்கி, மழையினால் சிவந் நனையும்படியான துவாரங்களுள்ள மேற் கூரையையுடைய எமது குடிசையில், நமது கண வன் திரும்பி வருகிறானென்று பல்லிச்சத்தம் எப் போது கேட்போம் என்று ஏதிர் பார்த்துக் கொண்டிருக்கும் என்மனைவியைப் பார்த்து, போய்ப்பதற்கு வஸ்திர மில்லாமல், வடகாற்றி னால் மெலிந்தும், கைகளால் தேகத்தைப் பொத் திக்கொண்டு, கால்களை மேலே மடித்துக் கொண்டு பெட்டிக்குள் இருக்கும் பாம்பைப் போல் பெரு மூச்சு விட்டுக்கொண்டிருக்கும் உன் கணவனை பாண்டியராசன் ஆளப்பட்ட மதுரைப்பட்டண வீதியில் கண்டோம் என்று சொல்லு வாயாக என்பதாம்.

இக்கருத்துடைய பாடலை அன்று நடுஇராத்திரி யில் புலவர் நாரையைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருக்குஞ்சமயத்தில், மாறுவேஷந்தரித்து க்கொண்டு நகர் சோதனைக்காக இராச வீதியைச் சுற்றிக்கொண்டு தேரடியின் சமீபத்தில் வந்த ராசன் இந்தப்பாடலை தொடக்கம்முதல் முடிவு வரைக்கும் உற்றுக் கவனித்துக் கேட்டான்.

இதைக் கேட்ட அரசன் ஆ! இதென்ன ஆச் சரியமாக யிருக்கிறது. இப்படியான பாடலை நான் இதுவரையிலும் கேட்டதில்லையே. இந்தக் கல்விப் பெருமையை யுடையவருக்கு அப்பாட லில் உள்ளபடி யிருக்கும் தரித்திரத்தைக் கேட் கச் சகிக்க முடியவில்லையே, என்று பலவாறாக அப்புலவரை வியந்து, தன்கருத்தில் சில நாளாய் நினைத்திருந்த அப்பாடலில் வெளிப்பட்ட ஓர் உபமானத்திற் காகவும் அதிசயித்தான்.

ஒரு நாள் இந்த அரசனவன் வேட்டைக்குப் போய்த் திரும்பும் பொழுது ஓர் குளக்கரையில் நீரின்ஓரமாய் அலைகளால் வேரின் கீழிருந்தமண் அலைபட்டு, அடிதெரிய ஓர் பனங்கன்று நிற்பதை யும், அதற்குச் சமீபமாக ஒரு செங்கால் நாரை யானது அடிபெருத்து நீண்டு, திரண்டு நுனிசிறு த்துச் சிவந்து பிளவு பட்டவாயுடன் நிற்பதை யும், இதைப்போலவே அடிபெருத்துத் திரண்டு நீண்டு பிளவுபட்டு இப்பனங் கன்றின்டியிலிருக் கும் பனங்கிழங்கையும் பார்த்து, இவ்விரண்டிற் கும் உபமானம் மிகவும் பொருந்தி யிருப்பதைத் தன்மனதில் நினைத்துக் கொண்டு, சந்தோஷத்து டன் வீடுவந்து சேர்ந்து, தன் சபையிலுள்ள புல வர்களை யெல்லாம் வருவித்து நாரை மூக்கிற்கு எப்பொருளை உபமானமாய் ஒப்பிடலாம்?" என்று கேட்டான்.

அதற்கு அவ்வித்வான்களெல்லாம் தத்தமக் குத் தெரிந்தபடி ஒவ்வொருபொருளை உபமான மாயச் சொன்னார்கள்.

அதைக்கேட்ட அவ்வரசனுக்கு தான் அன்று நேரிற்கண்ட உபமானப் பொருள் ஒருவராலும் வெளிப்படாமையால், தன் மனதிலிருக்கும் பொருளை வெளிப்படுத்துவோர்க்குப் பரிசாக ஆயிரம்பொன் கொடுப்பதாகச்சொல்லி அப்பொ ருளை முடிப்பாகக் கட்டி வைத்தான். அன்று முதல் அப்பொருளைச் சொல்வதற்கு நமது நாட் டில் ஒருவருமில்லையே என்று நினைந்து கொண் டிருக்கும் பொழுது,

"பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!"

என்று அந்த ஏழையின் வாக்கிலிருந்து, தன் பொருள் வெளிப்படக் கேட்டதால், அரசனுக்கு அளவில்லாத வியப்பும் மனச்சந்தோஷமும் முண்டாயிற்று. இவ்வாறு அரசனுக்குண்டான களிப்பினால் தான் தரித்திருந்த ஓர் பீதாம்பரப் பட்டை அப்புலவர்மேல் போட்டு விட்டு ஒருவருக்குந் தெரியாமல் திரும்பி அரண்மனை சேர்ந்தான்.

இதனை யுணர்ந்த புலவர் "வருவது தானேவரும்" என்பது பொய்யாகா தென்று, நாம் குளிரால் வருந்துவதைச் சகியாத ஒரு தருமசுணசீலன் இவ்வஸ்திரத்தை நமக்குப் போர்த்தினன்; என்று சந்தோஷித்து, நமது அன்னையாகிய நாமகளுடைய அருள் எவ்விதம் இன்னும்வரும் பார்ப்போம் என்று போசாதிருந்தார்.

அரண்மனைக்குப் போனதும் அவ்வரசன் காவலாளரைக் கூப்பிட்டு, எனது பீதாம்பரத்தை ஓரோ களவாடி விட்டார்கள், உங்களின் காவல் மிகுநேர்மையாக இருக்கிறது; அதைக் கண்டு பிடித்து, கள்வனை என்முன் கொண்டுவரல் வேண்டும் இல்லையேல் உங்களுக்குத் தக்க தண்டனை விதிப்பேன் என்றான். அக்கள்வனை அடிக்காமலும், திட்டாமலும் அழைத்துவர வேண்டும் என்றுஞ் சொல்லி அனுப்பினன்.

இவ்விதமே அக்காவலாளிகளும், நெடுந்தூரந் தேடியலைந்து வருகையில், தேரடியில் அப்பீதாம்பரத்தைப் போர்த்திக்கொண்டு, படுத்திருக்கும் புலவரைப் பார்த்து "திருடன் அகப்பட்டான்" என்று தமக்குள் சந்தோஷித்து ஒருவித உபத்திரப்படுத்தாமல் அரசன் முன்கொண்டு போய் விட்டார்கள்.

அரசன் அவர் முகத்தைப் பார்த்து, அவர் முகத்தில் சரஸ்வதியின் அருள் பிரகாசிப்பதை யறிந்து மிகுந்த களிப்புடன் அவரை நோக்கி அடே நீயார்! நான்போர்த்திருந்த பீதாம்பரத்தை எவ்விதம் களவாடினாய் என்றான்.

இவற்றை யெல்லாங் கேட்டபுலவர், நான் ஒன்றையும் அறியேன். இடி யிடித்தாற் போலுள்ள, இச்சம்பவங்களுக்கு நான் என்ன செய்வேன். இதுவும் நாமகளின் திருவிளையாடல்தான் என்று நினைத்து, அரசனைப் பார்த்து "வெறும்புற்கையு மரிதாங் கிள்ளை சோருமென் வீடுவரும, எறும்புக்கு மாப்பதமில்லை மன்னு"! என்று பாடத் தொடங்கியதும், அரசன் கோபங் கொண்டவனைப்போல நடித்து, இவன் பாட்டில் வல்ல கள்வனாயிருக்கிறான். இவனைச் சிறைச்சாலையில் அடைத்து விடுங்கள். என்று சொல்லி, மந்திரியைப் பார்த்து, இவர் மகாவித்வான் இவருக்குச் சிறைச் சாலையில் அரசருக்குச் செய்யுமாப் போல் தக்க உபசாரஞ் செய்ய வேணும் என்று இரகசியமாய்ச் சொன்னன்.

அடுத்தநாள் வேறொரு மந்திரியை யழைத்து, இந்தப்புலவர் விடுதலை பெறுமுன், சத்திமுத்தம் என்னும் பெயரையுடைய ஊருக்குப் போய், இவருடைய வீட்டை எனது அரண்மனையைப் போலக் கட்டி, இங்குள்ள மாதிரி பல வஸ்துக்களாலும், அதை அலங்கரித்து, புலவர் மனைவிக்கு, இரத்தினபரணங்களையும் பட்டுச் சேலைகளையும், தோழியரையும் ஏவலாளரையும் சேர்ப்பித்து வரும்படி ஆக்ஞாபித்தான்.

இதற்கிடையில் புலவரும் தன் மனைவியை நினைந்து இரப்பிய கவலையுடன் சிறைச்சாலையில் நுழைந்தார். பின் இவருக்கு ஏவலாளிகள் வந்து ஸ்நானம் செய்வித்து அறுசுவை பதார்த்தங்களோடு கூடிய அன்னத்தைப் படைத்து, அரசர்களுக்குச் செய்யும் மாதிரிச் செய்து கொண்டு வந்தார்கள்.

இவற்றைப் பார்த்த புலவருக்கு அதிசயம் மேலிட்டு, இதுவும் நமது அன்னையாகிய கலை மடந்தையின் திருவருளினால் இன்னும் என்ன நடக்குமோ பார்ப்போமென்று தியானித்துக் கொண்டே நாட்களைக் கழித்து வந்தார்.

சில காலஞ் சென்ற பின், அரசன் சிறையிலிருக்கும் பீதாம்பரக் கள்வனைக் கொண்டு வாருங்கள் என, காவலாளிகள் அப்படியே அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினர்கள். அரசன் மரியாதையாக நீர் யார்? எனது ஆடையைக் களவாடிய காரணம் யாது? என வினவினர். அதற்குப் பதிலாக,

"வெறும் புற்கையு மரிதாங் கிள்ளை
சோருமென் வீடு வரும்
எறும்புக்கு மாப்பதமில்லை முன்னு
ளென்னிருங் கலியால்
குறும்பைத் தவிர்த்த குடி தாங்கியை
வந்து கூடிய பின்
தெரும்புற் கொள்பானை கவளங்
கொள்ளாமல் தெவிட்டியதே"

(க) எனக்கு இங்கே வருமுன், உப்பில்லாத வெறுங் கூழுமரிதாயிருந்தது.

(உ) கிளிபோன்ற எனது மனைவியும் உணவிற்கு வழியில்லாமல் சோர்ந்தாள்.

(ங) என் வீட்டில் வரும் சிறு எறும்புக்குக் கூட என் வீட்டில் மாவாகிலுங் கிடையாது.

(ச) என்னைப் பிடித்த வறுமையை யோட்டிய அரசனே! உம்மை யடைந்த பின்பு, புல்லைத் தின்

னும் யானைகள் அவற்றிற்கு இடும் பச்சரிசிக் கவளத்தை யுட் கொள்ளாமல் உமிழ்கின்றன" என் பதாம்.

முதலில் இப்பாடலை பாடியபோது, 'எறும்புக்கு மாப்பதமில்லை மன்னு! எறும்பு பாடியவர், இப்போ தன் நிலைமை மாறி யிருப்பதை உணர்ந்து, எறும்புக்கு மாப்பதமில்லை முன்னுள் என மாற்றி விட்டார். ஆகையால் இவர் கலை மகளினருள் பெற்றவர் என ஆனந்தம் உடையவனுப்க் கவலாளிகளைப் பார்த்து, இவரை ஊருக்கு வெளியே போக விடுங்கள் எனக் கட்டளை யிட்டான்.

அப்பா பிழைத்தேன் என அதிக சந்தோஷத்துடன் தன் மனைவியை மறுபடியும் பார்க்கப் போகிறேனே என்று எண்ணிய கவலையும் நீங்கித் தனது பழைய கந்தையுடன் தன் வீட்டை நாடி அதிக ஆவலுடன் வந்தார்.

இவ்விதம் வந்தவர் தன் வீடு பெரிய மாளிகை போலும் அரண்மனையில் மேள வாத்தியம் முழங்குவதைப் போலும், பல ஏவலாளர் போக்கு வரத்தா யிருப்பதையும் பார்த்துப் பயந்து "ஓகோ! நாமிருந்த இடத்தை யாரோ ஒரு அரசன் அலங்கரித்துக் கொண்டு இவ்விதமாய் அலங்கரித்து வைத்துக் கொண்டான். நமது மனைவி என்ன கதியடைந்தாளோ" என்று, அதிக விசனத்துடன் அங்குமிற்கும் ஏவலாளியைப் பார்த்து இங்கே முன் இருந்த குடிசை எங்கே. அதிலிருந்த என் மனைவி எங்கே எனக் கேட்டார்.

அதைக் கேட்ட காலற்காரன், இவன் ஏதோ பயித்தியம் பிடித்தவன் போலிருக்கிறான். இவனைத் தூரத்தி விடுங்கள் என்றான்.

இவ்விதம் இரம்பிய கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, இவரது மனைவி மேல் மாளிகையிலிருந்து கொண்டு, நமக்கு பாண்டியனால் கிடைத்த இச்செல்வங்களால் என்ன பயன்? நமது கணவனில்லாமல் இச்செல்வங்கள் நமக்கேன்? அவர் எப்போது வருவாரோ என்று கண்பூத்துப் போகுமட்டும், மதுரைப் பட்டண வீதியைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அப்படித் தன் கணவன் வரவை எதிர் பார்த்திருந்தும், தன் வீட்டைதிரில் புலம்பிக் கொண்டிருக்கும் புலவரை அறிந்து கொள்ளாமற் போய்விட்டாள்.

ஏனென்றால், 'இவ்வளவு செல்வங்களை யளித்தரசன், தன்னகர் விட்டுத் திரும்பும் புலவரைத் தக்க ஆடம்பரத்துடன் அனுப்புவானல்லவா? என்கிற எண்ணத்துடனிருந்ததால், பழைபவைத்துடனிருந்த தன் புருஷனைக் கண்டறிய முடியாமற் போய்விட்டாள். பிறகு சிறிது நேரத்தில், இவளின் நோக்கம் புலவர் மேல் பட்டவுடன், மாளிகையை விட்டுக் கீழே வந்து, "தாயைப் பிரிந்த சேயைப் போல்" ஓடி வந்து, புலவரைத் தொழுது, அவர் பாதத்தைக் கழுவி, புஷ்பத்தாலர்ச்சித்து அவருக்கு விலையுயர்ந்த உடைகளைத் தரிக்கச் செய்து, அறுசுவையோடு கூடிய அன்னத்தைப் புசிக்கச் செய்தாள்.

இதைக்கண்ட புலவர், திப்பிரமை கொண்டவராய், ஒன்றும் பேசத் தோன்றாமல், அன்னம் புசித்துக் கொண்டே, இவ்வாச்சரியங்களென்ன வென்று மனைவியைக் கேட்டார்.

அதற்கு, அக்கற்பரசியானவள் பாண்டிய ராசன் மந்திரியை அனுப்பி இவ்வளவுஞ் செய்வித்தானென்று சொல்லி முடித்தாள்.

பின், புலவர், தான் போனது முதல், இது வரையில நடந்தவற்றைச் சொல்லி நாமகளினுடைய அருளை இருவரும் வியந்து குபேர செல்வத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு சில காலஞ் சென்ற பின் பாண்டிய ராசன், தனது மந்திரிகளுடன் ரத, கஜ, துரக பதாதிகளைச் சத்தி முத்தத்திற்கனுப்பிப் புலவரை அதிக மரியாதைகளுடன் எதிர் கொண்டு அழைப்பித்து, ஒருவருக்கொருவர் பழைய கதைகளெல்லாம் பேசி, முன் புலவர் பாடிய, 'நாராய் நாராய்' என்கிற பாடலையும், தன் சபையிற் பிரசங்கஞ் செய்யச் சொல்லிக் கேட்டு, ஆனந்தித்து, முன்னூரை மூக்குக்குச் சமானபான பொருளை வெளியிடுவோருக்குக் கொடுப்பதாய்க் கட்டி வைத்திருந்த பொன் முடிப்பை எடுபபித்துப் புலவர் முன் வைத்து அவரை ஏற்றுக் கொள்ளச் சொல்லி, வெகு அலங்காரத்துடன், அவர்களை ஊர்க்கோலம் செய்வித்து, புலவரை அன்று முதல் தன் சபையில் முதற் புலவராக வைத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் வெகு அந்நியோந்நியமாய் வாழ்ந்து வந்தார்கள்.

நேயர்களே! இக்கதையில், புலவருடைய கல்வியின் அருமையையும், அவருடைய கற்புள்ள மனைவியின் பெருமையையும், அறிதற் கிடமாயிருக்கின்றது.

கல்வி.

நேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றையவை.

ஒருமைக் கட்டான் கற்ற கல்வி பொருவற்
கெழுமையு மேமப் புடைத்து.

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

கற்பு.

தெய்வந்தொழா அள், கொழுநன் தொழு தெழு
பெய்பெனப் பெய்யு மழை. [வாள்
தற்காத்துத்தற்கொண்டான் பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

சுதி.

10-12-37.

: : பெண் கல்வி : :

(தொடர்ச்சி)

இனி, பொதுக்கல்விக்கு மேலுள்ள கொழிற் கல்வியைக் கவனிப்போம். "சீர்திருத்தம்" என்ற பெயரால் அன்பிற்சிறந்த நம்நாட்டு நாகரிகத்தை முற்றும் ஒட்டி, ஆடம்பரமிகுந்த மேல்நாட்டு நாகரிகத்தை இந்நாட்டில் நாட்டப்பெரிதும் விரும்பி நிற்கும் நவீன நாகரிகப்பித்து மிகுந்த மாதர்கள் இந்நாட்டு மாதரின் இயல்பைக் கவனியாதொழிவது பெரிதும் வருந்துதற்குரியதே. இந்நாட்டுப் பெண்மணிகள் மேல்நாட்டுப் பெண்களைப்போல் ஆடவருடன் சமானமாக அமர்ந்து காரியாலயத்தில் வேலை செய்வதில்லை; குதிரை ஏறிச்சவாரி செய்வதில்லை; கண்டபுருடருடன் கைகுலுக்குவதில்லை; விரும்பியவர்களுடன் நடனம் செய்வதில்லை; ஆடவருடை அணிவதில்லை; ஆடவருடன் பந்தாடுவதில்லை; துணையின்றித் தனிமை எங்குந் திரிவதில்லை. அத்தகைய சுதந்திரமே நவீன நாகரிக வாழ்வில் பெறக்கூடிய பெண்சுதந்திரமாகுல் அச்சுதந்திரத்தை நம் நாட்டுப்பெண்களில் ஆயிரத்தில் ஒருத்தி கூட விரும்பமாட்டாள் என்பது உறுதி. ஆதலின் நம்நாட்டுப்பெண்மணிகளுக்கு ஆடவர் பயிலும் தற்கால நவீனநாகரிகத் தொழிற்கல்வி எத்தகைய நற்பயனையும் எப்தவிக்கப்போவதில்லை. பெண்கல்லூரிகளில் பயின்று உயர்தரப்பட்டங்களைப் பெறுவதே, பெண் பிறவியின் சீரிய நோக்கமாகாது. ஆண்டுதோறும் ஆங்கிலக்கல்லூரிகளிலிருந்து வெளிப்படும் 'யூனியர்', 'சீனியர்', 'மெட்ரிக்குலேசன்' 'பி—ஏ', 'எம்—ஏ' பட்டதாரிகள் பலரும் வேலைகிடையாத திண்டாட்டத்தினால் பெரிதும் வருந்திக்கொண்டிருக்கும்பொழுது அனியாயமாகப் பணத்தை வாரியிறைத்து கல்விப்பட்டம் பெறும் பெண்மணிகள் கூடவா இத்தகைய பரிதாபநிலைக்கு உட்படவேண்டும்! அறிவு வளர்ச்சிக்காகவன்றி—கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக ஆடவர் பயிலும் நவீன நாகரிகக் கல்வியினால் 'மனைவி' என்றும் 'இல்லாள்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுமாறு வீட்டுக்குச் சுடர்விளக்குப் போல் விளங்கி—கணவன் மக்கள் உறவினர் முதலியவர்களுக்கு பெருமகிழ் ஊட்டக்கூடிய சீரிய செம்பணியில் தலைப்படுதற்கு உரிய தமிழ் நாட்டுப்பெண் மணிக்கு எத்தகைய நற்பயன் விளையக்கூடும்? நவீன நாகரிக முறையில் புகட்டப்படும் தற்காலப் பெண்கல்வி, குடும்பவாழ்க்கையில் தலைப்படும் தமிழ்நாட்டுப் பெண்மணிக்கு எவ்வழியில் பயன்படக் கூடும்? தற்கால நவீன நாகரீகப்பெண் கல்லூரிகளில் கல்விபயிலும் பெண்களுக்கு மேல்நாட்டுப்பழக்க வொழுக்கங்களில் பெரு விருப்பும் இந்நாட்டுப் பழக்க வொழுக்கங்களில் பெரு வெறுப்புமே ஏற்படுகின்றன. ஆதலின் தற்காலப்பெண் கல்லூரிகளில் பெண் மணிகள் பயிலும் கல்வி அவர்களது இல்லற வாழ்க்கையில் சிறிதும் பயன்படாததாகவே இருப்பதால், அத்தகைய கல்வியில் தாய் நாட்டில் பற்றுடைய எப்பெண்மணிகளும் மோகங்கொள்ள மாட்டார்கள்.

"பெண்மணிகளுக்கு அவரவர் கணவரே கண் கண்ட தெய்வம்," "கணவர் மனம் மகிழக்கூடியவாறு பணி செய்து கிடப்பதே அவர்களுடைய கடமை; குடும்பக் காரியங்களில் தவிர்த்து வெளி விஷயங்களில் தலைப்படுவது மடமை; சிறு வயதில் தந்தையின் ஆதரவிலும், இளம் பருவத்தில் கணவனின் ஆதரவிலும் முதிய பிராயத்தில் மகனின் ஆதரவிலுமே காலம் கழிக்க வேண்டியவர்களான பெண்களுக்கு, எக்காலத்திலும் சுதந்திரம் கிடையாது; தமிழ் நாட்டுப் பெண்கள் கற்

பொழுக்கத்தில் கருத்துச் செலுத்த வேண்டிய வர்களேயல்லது, கல்வியில் கருத்து செலுத்துவ தற்கு உரியவர்களல்லர்"—என்று பெண் கல்வி யை எதிர்ப்போர் பலரும் வாதிப்பதுண்டு. அக் கூற்றைச் சிறிது கவனிப்போம்.

கன்னிகையாக இருந்தபெண் ஒருவனது வாழ்க் கைத் துணைவியாக மாறும்பொழுதே — அவனது கரத்தை அக்கினி சாட்சியாக, சபையோர் சாட்சி யாக, பிராமணர்கள் சாட்சியாகத் தேவர்கள் சாட்சி யாக பற்றிய கணத்திலிருந்தே—தனது கணவனே யே தனக்குரிய தெய்வமாகக் கருதி நடக்க வே ண்டுமென்பது அப்பெண்ணின் கடமையாகி விடுகிறது. தனது கணவனிடம் கொண்ட பதி-பக்தியின் சிறப்பினால், மும்மூர்த்திகளையும் குழந் தைகளாக மாற்றிவிடக் கூடிய ஆற்றல் பெற்ற அநுசூயை வாழ்ந்த நாடு நம் நாடு. பதி-பக்தி யின் சக்தியினால் விதியையும் வென்ற வீர சாவித் திரி வாழ்ந்த பூமி நம்பூமி. இந்நாட்டில் பிறந்த பெண்மணிகளுக்கு பதி-பக்தியே உயிரினும் சிற ந்ததாகும் என்பதை எவரும் மறக்கமுடியாது.

ஆயினும் அநுசூயையும், சாவித்திரியும் கல்வி யினபத்தை சிறிதும மதியாமல்—கலை மகளை நெஞ் சிலும் நினையாமல்—வாழ்க்கை நடத்தினரென்று எவரும் நிரூபிக்க முடியாது. அவர்களே மணந்த கணவர் கல்விக் கடலில் ஆனந்தமாகத் திளைத் துக் கொண்டிருந்தபோது, அவர்களது வாழ்க் கைத் துணைவிகளாக அமைந்த அப்பெண்மணி கள் கல்வி யின்பத்தை மதியாதவர்களாக இருந்த தாக நிரூபிக்க முயல்வது, அறிஞரால் பெரிதும் பரிகசித்தற்கு உரியதேயாகும். கல்வியின்பத் தில் கருத்தைச் செலுத்தாத பெண்மணியால், கல்விப் பற்று மிகுந்த கணவனே எங்ஙனம் களிப் பூட்டக் கூடும்? "மதுரத்தே மொழி மங்கையர் உண்மை தேர்—மாதவப் பெரியோருடன் ஒப் புர்றே—முதுமைக் காலத்தில் வேதங்கள் பே சிய—முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்"—என்னும் பாரதியாரின் மணி மொழி ஈண்டு நினை வுகூர்ந்து பார்க்கத் தக்கது. பண்டைக்கால த்து நாட்டு நாரீமணிகள், கற்புக்கரசிகளாக மட்டு மன்றி கலை யின்பச் செல்விகளாகவும் விளங்கினர் என்பதை வலியுறுத்தக் கூடிய சான்றுகள் எண் ணிறந்தன உள. விரிப்பின் பெருகுமாதலின், மேற் செல்வோம்.

"அதிகம் படித்த பெண்ணே மணந்து கொண் டால், நம்மை மதிக்கமாட்டாள்; குடும்பக்காரியங் களில் சிரத்தை கொள்ளமாட்டாள்; எப்பொழு தும் புத்தகமும் கையுமாகவே யிருப்பாள். என் ற எண்ணம் ஆடவர்கள் பலர் உண்டு. நவீன நாகரிகப் பெண் கல்லூரிகளில் கற்றுத் தேர்ந்து, உயர்தரப்பட்டம் பெற்ற பெண்களே மணந்து கொள்வோரே, அத்தகைய அச்சம் கொள்ளக் கூடும். அவ்வாறின்றி, தமிழ் நாட்டு நாகரிகத்தி ற்கு இணங்கிய சீரிய முறையில் படிப்பிக்கப்பட்ட மங்கை, தான் பெற்ற கல்வியறிவு தனது கண வனே இன்பக் கடலிலாழ்த்துவதற்கும், குடும்பமா கிய அரசை குறை வின்றி சிறப்புற நடத்துவத ற்குமேயாகும் என்னும் உண்மையை என்றும் மறவாளாதலின், அத்தகைய வித்தியாவதியைப் பத்தினியாகப் பெறும் பாக்கிய அச்சமடையாது பெருமகிழ்ச்சியே பெறுவான் என்பதுதிண் ணம். கல்விபறிவில்லாத பெரும் பாலோர் தம க்கு வாய்க்கும் ஓய்வு நேரத்தில் ஊர்வம்பழந்து கொண்டிருப்பதும், உறங்குவதும், விளையாடிக் கொண்டிரு பதும், வீடு வீடாகச் சென்றரை யடித் பொண்டிருப்பதும் சர்வ சாதாரணமாக இருந்து வருகிறது. கல்விச் சுவையை அனுபவிப் பதில் ஆர்வமிருந்த பெண்ணையின், தனக்குவாய் க்கும் ஓய்வுநேரத்தில் சிறு பகுதியையும் வீணில் செலவழிக்க மனங்கொள்ளாமல் கலையின்பத்தி லேயே கருதைச் செலுத்தி ஆனந்திப்பதுடன், தன் வீட்டிலுள்ள குழந்தைகளும் பெரியோர் களுங்கூட விரும்பிக்கேட்குமாறு சீரியநூல்களில் சிலவற்றைப் படித்துக் காட்டுவதில் உற்சாகமு டையவளாகவுமிருப்பாள் எனபது திண்ணம். கணவன் எப்பொழுதேனும் கோபங் கொள்ள நேரிட்டால், மடியை இழுத்துக் கட்டிக் கொண்டு, ஓரவஞ்சகக்குப் பத்து வசைகள் திருப்பிக்கூறி எதிர்த்து நின்று ஆரவாரிக்கும் கல்லாப் பெண் களின் சிறுமைக்குணத்தை, சீரிய வித்தியாவதி கள் கனவிலுங் கருதார். கணவன் கொண்ட சினத்தைப் புன்னகையாலும் இன்னுரைகளா லும் தணிவிக்கமுபல்வதே வித்தியாவதிகளினியல்பு. அத்தகைய உத்தம பத்தினிகள்வாழும் வீடு, இகலோக சுவர்க்கம் போலும் பெரிதும் சிறந்து விளங்கும்.

நவீன நாகரிகப் பெண்கல்லூரிகளில் பயின்று உயர்ந்த பட்டம் பெற்ற பெண்மணிகளே மணந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் இல் லற இன்பம், எவ்வளவு காலம் நீடித்து நிற்கக் கூடும் என்பதை அவர்களே விரைவில் உணர்ந்து கொள்ளக்கூடும். குழந்தை பசியால் வீறிட்டு அழுதுகொண்டிருக்க—பர்மியர் அடுப்பங்கரைக் கனலில் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்க— மாமனார் மூலையிலமர்ந்து முணு முணுத்துக் கொண்டிருக்க—கணவன் அன்னம் போடுமாறு காலடியில் வேண்டிக்கொண்டு நின்று கொண்டிரு க்க—கல்லூரியில் படித்துப் பட்டம்பெற்ற நவீன நாகரிகப் பெண் சாய்வுநாற்காலியில் படித்துக் கொண்டு நாவல்ப் படிப்பில் ஆழ்ந்து தன்னையும் மறந்து கிடப்பது 'பி-ஏ' 'எம்-ஏ' படித்தபெண்

மணிகள் வீட்டில்க் காணக்கூடிய சர்வசாதாரண காட்சியாகும்.

செந்தமிழ் நாட்டுச் சகோதரர்களே! நீங்களிவ் விருவகைப் பெண்களுள் எவளை விரும்புவீர்கள்? தமிழ்நாட்டு நாகரிகத்தைத் தழுவி—குடும்பநிர்வாகத்தில் சிறந்து—எல்லோர்க்குமின் பூட்டக்கூடிய அன்பு நெறி பின்பற்றி நடக்கக்கூடிய பெண்ணையே விரும்புவீர்களல்லவா? அவ்வனமாயின் உங்களது வாழ்க்கைத் துணைவிகளாகிய பத்தினிக்குக் கணவராக மட்டுமன்றி, கலியின்பத்திலும் உங்களது மனைவிகள் உறுதுணையாகக் கொண்டு ஆனந்திப்பீர்களாக. உங்களது நன்முயற்சிகளுக்குத் திருவருள் துணை நிற்பதாக.

சிதம்பரப்பிள்ளை,
செந்தூல்.

- விமலாவின் இல்லற வைபவம் -

நீர்வழம் நிலவழம் பொருந்திய தில்லைமாநகரில், அதியற்புதமானதும கண்ணியமானதுமான ஓர் தெய்வ ஸ்கலமும் பரந்த ஆலும், அரச விருக்ஷமும், நதிவாய்க்கால்களும் உள்ள ஓர் அழகான இடப்.

இந்நகரின் ஓர் சிறு நதிக்கரை யோரத்தில் ஓர் அழகிய சிறு குடிசையில் வசித்து வந்தார் இராமநாதன் என்பவர். தெய்வ பக்தியிலும் நல்லொழுக்கத்திலும், அநாதைகளைக் காப்பாற்றுவதிலும், தருமஞ் செய்வதிலும் இவருக்கு இணையாக தில்லைநகரில் வேறொருவர் இல்லையெனவே சொல்லலாம். இவருக்குச் சாரதா என்றொரு மனைவியுமுளர். இவர்கள் கண்டோர் இன்புறுமவண்ணம் இல்லறதருமம் நடாத்தி வருங்காலத்தில் அனேக ஆண்டுகள் செய்துவந்த தவத்தின் பயனும் பெரியோர்களினுடைய ஆசீர்வாதத்தினும் ஓர் அழகிய பெண்குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்கு விமலாதேவி என்று நாமம் சூட்டி இராமநாதனும் சாரதாவும் மிக்க அன்புடன் வளர்த்து வந்தார்கள். ஓர்நாள் விமலாவும் மண் விளையாடி சிறுதேருறட்டி அண்டைவீட்டுப் பிள்ளைகளுடன் பூவெடுத்துச்ஸ்ரீபரந்தாமனுடைய விக்கிரகத்திற்கு அலங்கரித்து சிறுதேரில்வைத்து சீதா, சரஸ்வதியாகிய தன் தோழிகளுடன் வீதி வலம் எடுத்துச்சென்று குதூகலமாக விளையாடி நிற்கும் சமயம் கதிரவனும் மேற்றிசையில் சாய்ந்தான். இதற்குள் விமலாவின் தாயார், கண்ணே! விமலா! இங்கேவா அம்மா, இருட்டிவிட்டதல்லவா, நாளை விளையாடலாம் உன் தோழிகள் சீதாவும் சரஸ்வதியும் நாளை வருவார்கள். நீ வா கண்ணே, கைகால்களைச் சுத்திசெய்து பரந்தாமனுக்குப புஷ்பம் சூட்டி வணங்கிநின்று தோத்திரப்பாடி விட்டுவா அதற்குள் நான் உனக்கு அமுது கொண்டுவருகிறேன், என்று சொல்லிவிட்டுச்சென்றாள். விமலாவும், சீதாவுக்கும் சரஸ்வதிக்கும் வந்தனங்கூறிவிட்டுச் சென்றாள் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை விமலா எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்தவுடன் சீதாவும் சரஸ்வதியும் வந்து சேர்ந்தார்கள். அதன்பின்னுல் இராமநாதனின் சகோதரியின் அரிய புத்திரியான பங்கஜமும் வந்து சேர்ந்தாள். நால்வரும் சற்றுநேரம் பாட்டுகள்பாடி ஆடி விளையாடி முடிந்ததும் பங்கஜத்திற்குப் பள்ளிக்கூடம் போகும் வேளை வந்ததும் தான் பள்ளிக்கூடம் போய்வருகிறேன் என்று சொல்லிவிட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டாள். விமலாவுக்கு ஐந்து வயதுபூர்த்தியாகியும் தானும் பங்கஜத்துடன் பள்ளிக்கூடம் போய்வரவேண்டுமென்ற ஆவலின் தூண்டுதலினுல் உடனே சென்று தன் தாயாரை வணக்கி தானும் பள்ளிக்கூடம் போவதற்கு உத்தரவு கேட்டாள். இதற்குள் இராமநாதனும் அவ்விடம் வர இருவரும் யோசனை செய்து அன்று நல்ல முகூர்த்தமாகையால் இராமநாதனும் தன் அருமைப் புதல்வி விமலாவிற்குக் கலை மகளின் ஆசீர்வாதம் பெற்று வித்தியாரம்பமும் செய்வித்தார். அன்று தொடக்கம் அண்டை வீட்டுப் பிள்ளைகளும் விமலாவும் பள்ளிக்கூடம் சென்று நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தன் பாடங்களைப் படித்துத் தன் எட்டாவது வயதில் நாலாவது வகுப்பும் பூர்த்தி செய்தாள். அதன் பின்னுல் அந்த நாட்டுப் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு இடமில்லாதிருந்த படியால் மேல் படிப்பிற்கு அவ்வூரிலிருந்து ஐந்து மைல்களுக்கப்பாலிருக்கும் பட்டணத்தின் பெண் கல்லூரியில் படிக்க வேண்டியதாக யிருந்தது. விமலா தன் சிறு ஊரை விட்டு வெளியேறினதே கிடையாது. தன் சிறு குழந்தையின் கல்வியைப்பற்றி இராமநாதன் சிந்திக்கலானுர். தன் மனைவி சாரதாவிடம் யோசனை செய்தபின் பட்டணத்துக் கல்லூரியில் தன் குழந்தையைச் சேர்த்து மேல் படிப்பிற்கு ஆக வேண்டிய ஒழுங்குகளையும் பட்டணத்தில் தங்கி நிற்பதற்கு இட வசதிகளையும் செய்யலானுர். விமலா இதை யறிந்த

தும் ஆனந்தக் கூத்தாடினாள். பரந்தாமனை ஆயிரம் முறை வலம்வந்து வணங்கினாள். தோத்திரப் பாடல்கள் பாடினாள், குதித்தாள் அண்டை வீட்டிற் கோடி சீதாவுக்கும், சரஸ்வதிக்கும் வாயோயாது கூறினாள். தாயாரிடம் ஓடிவந்து, அம்மா பட்டணத்திற்கு எப்போது போகிறது, நான் மேல் படிப்பிற்காகப் பட்டணம் சென்று பெண் கல்லூரியில் படிப்பது உண்மையா அம்மா, எங்க அப்பா கட்டாயம் அனுப்புவாரா, அப்பாவிடம் சொல்லிச் சீக்கிரம் ஒழுங்கு செய்யம்மா என்று வாதாடினாள். குழந்தாய் இன்னும் சந்தேகமா, அப்பா உனக்காக வேண்டிய ஒழுங்குகள் செய்யப் பட்டணம் சென்றிருக்கிறாரம்மா, வருகிற வெள்ளிக்கிழமை நவராத்திரித் தினத்தன்று உன்னை அவ்விடம் அழைத்துப்போய்க் கல்லூரியில் படிக்க வைக்கலாம், இப்போ சாப்பிட்டுச் சற்றுக் கண்ணயர்ந்து கொள் என்று வேண்டினாள். எனக்குப் பசிக்கவே யில்லையம்மா இராவுக்குச் சாப்பிடலாம் என்று சொல்லிவிட்டுப் பின்னும் அண்டை வீட்டுப் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பரந்தாமன் தேர்கொண்டு ஊர்வலஞ் சென்றாள். இப்படியே பள்ளிக்கூடம் செல்லும் திருநாளை எதிர் பார்த்தவண்ணம் விமலாவும் அன்னம் புகிப்பதுமின்றிச் சந்தோஷத்தினால் குதித்தோடியும் நித்திரையில் எழுந்து பள்ளிக்கூடம் செல்வதுமாகத் தன் பொழுதைப் போக்கி நவராத்திரித் தினத்தை எதிர் பார்த்து நின்றாள். நவராத்திரித் தினமும் நாளை வரப்போகிறது. சாதம் சாப்பிடாமல் மான் கன்று துள்ளுவதுபோல் துள்ளிக்குதித்து ஆடி அன்று இரவு தாயாரின் பிடிவாதத்தினால் சிறு ஆகாரம் உட்கொண்டு தன் உடுப்புகள், பட்டுப்பாவாடைகள் யாவும் எடுத்துத் தயார் செய்து விட்டுப் பரந்தாமனைக் கும்பிட்டுப்பின் நித்திரை செய்தாள். இரவு மூன்று மணிக்கே விழித்து, அம்மா, நேரமாகிவிட்டது எழுந்திரு, பட்டணம் போகவேணும் எனக்கு உணவு தயார் செய். நான் குளித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி எழுந்தாள். இன்னும் சற்று நேரம தூங்கம்மா, நேரமிருக்கிறது, ஐந்து மணிக்கெழுந்து தயார் செய்யலாம் என்று தாயார் இடை மறுத்தாள். இக் கூக்குரலைக்கேட்ட இராமநாதனும் எழுந்து என்ன அமர்க்களமாக யிருக்கிறது. பொழுது விடியவில்லை, விமலாவுக்கென்ன உடம்பு என்று வினவ, அவளிப்போதே பட்டணம் போக வேண்டு மென்று நிற்கிறாள் என்றார் தாயார். படிப்பில் இவ்வளவு கவனமாகயிருக்கும் தன் அரியகுழந்தையை எடுத்து முத்தமிட்டார். விமலா அண்டை வீட்டுப் பெண்கள் சீதாவுடனும் சரஸ்வதியுடனும் விளையாடுவதற்கல்லவா இவ்வளவு அவசரமாக எழுந்திருக்கிறாள் என்று கேலியாகப் பேசிக் கொண்டிருக்கும் சமயம் கடிகாரமும் ஆறுமணியடித்தது—சதிரவனும் கீழ்த்திசையில் எழுந்தான். பின்முவரும் காலைக்கடனை முடித்துக்கொண்டு கலைமகளையும் பரந்தாமனையும் தியானித்துக் கொண்டு உணவருந்தினர்.

சாரதாவும் விமலாவை அலங்கரித்துக் கொண்டு பட்டணம் சென்று பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் இந்துப் பெண் கல்லூரியில் சேர்த்தாள். விமலாவும் கல்வியறிவில் தேர்ந்து பண்டித வகுப்பிலும் முதல்வியாகத் தேர்ச்சிபெற்றாள். அழகிலும் சிறந்து சந்திரனை ஒத்த முகவசீகரமும், மகாலக்ஷ்மி அவளாபென விளங்கினாள். வயதும் பதினாறு முடிவுபெற்றது.

இராமநாதரும் அர்த்தனி சாரதாவும் விமலாவிற்கு வரனை தேடவேண்டுமென்று யோசனை செய்து முடிவுக்கு வந்தார்கள். வரனும் கிடைத்தது. மாசம் ஒன்றுக்கு 250 ரூபாய் வருமான முள்ள விதுயரங்கனை என்ற ஒருவனுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுத்தார்கள். தம்பதிகள் பூவும் மணமும் போல் இனிது வாழ்ந்து வந்தனர்.

சில ஆண்டுகள் கழிந்தபின் இராமநாதனும் அதன்பின் அவர் பத்தினி சாரதாவும் காலமாயினர். விமலாவும் தன் தாய்தந்தையர் மரணத்தைக் குறித்துவருந்தலானாள். துக்கம் என்பதை அவள் பிறந்தது தொடக்கம் தந்தை யிறக்குமவரை அறியாதிருந்த விமலா, தாயும் இறக்க ஆறாத் துயரத்தில் வீழ்ந்தாள். அன்ன ஆகாரமின்றி வருந்தினாள். தனக்கு இனித் தன் கணவனே சதமென்று நினைத்துத் தன் கணவனுக்கே பூசை செய்து பாலும் நீரும் பூவும் மணமும் போல ஒரு மனத்தினராய் வாழ்ந்து வந்தனர். பரந்தாமன் திருவுருவம் போன்ற ஓர் ஆண் மகவும் பிறந்தது.

சில நாட்கள் சென்றதும் விஜயரங்கன் நேரங் கடந்தி வீட்டுக்கு வரத் தலைப்பட்டான். விமலா விஷயமறியாது ஓர் நாள், நாதா! சில நாட்களாக இப்படியே அதிக நேரங் கழித்து வருகிறீர்களே, ஆபீசில் ஏதாவது கஷ்டமோ என்னமோ தெரிய வில்லை, விஷயத்தைக் கூறும்படி வேண்டினாள். கண்ணே! இதுவரை விஷயத்தைச் சொல்லாது விட்டுவிட்டேன், இப்பொழுது ஆபீசில் என்கூட வேலை செய்பவர் ஒருவர் ஆறு மாத லீவில் கல்கத்தாவுக்குச் சென்றிருக்கிறார். அவர் வரும் வரை அவர் வேலையை நானே செய்து வருகிறேன் இதனால் வீட்டுக்கு வருவதற்குச் சற்று நாழிகையாகிறது கண்ணே! பயப்படாதே என்று ஆறுதல் சொல்லித் தேற்றிவிட்டார். விமலா என் செய்வாள், தன் நாயகன் சொல்வது உண்மை யென நினைத்து வீட்டில் வேலைக்காரி கண்ணம்மாளுடன்

வேலைகளைச் செய்து மிகுந்த நேரங்களில் தன் அரிய புத்திரனுடன் நேரத்தைக் கழித்து வருவாள்

இன்னும் சில காலம் கழித்து விஜயரங்கனும் கஷ்டப்பட்டுச் சில நாட்கள் இரவு எட்டுமணிக்குள் வீட்டிற்கு வந்து விடுவான். விமலாவும் தன் கணவனின் கூடிய வேலையை நிறுத்து அவர் சாப்பிட்டு வீடுவந்தவுடன் எல்லா உபசாரங்களும் செய்து சங்கீதம் பாடித் தன் புதல்வனைக் கையில் எடுத்துத் தன் கணவனை இன்புறச் செய்வாள். தினமும் தன் நாயகன்வரவை எட்டு மணிக்கு எதிர்பார்த்தாள். சில நாட்களாக ஒன்பதுக்கும் பின்னர் சில நாட்கள் பத்துமணி, பதிலொருமணிக்கும் எதிர்பார்த்து அன்னமில்லாது வருந்தினள். பேதை விமலா என்ன செய்வாள். எதையறிவாள். ஆபீசில் வேலைபார்க்கும் மற்றவர்கள் நேரத்துடன் வேலை முடித்துவிட்டு வீட்டிற்குப் போகிறார்களே என் நாதருக்கு மாத்திரமா இவ்வளவு நேரம் ஆபீசில் வேலையிருக்கிறது. உடம்பு மெலிவடைந்து விடுகிறதே. ஈசனே! பரந்தாமா! என் கணவனுக்கு நற் சுகத்தைக் கொடுக்கலாகாதா என்று நொந்து கொள்வாள் இப்படியாகச் சில நாட்கள் இரவு பன்னிரண்டு மணிக்கே முன் பின்னாக விஜயரங்கனும் வீடு வந்து சேருவான். இன்னும் சில நாட்கள் சென்றதும் இரவு முழுவதும் வராமலே நின்று விடுவான்.

விமலா அன்னம் தண்ணீரின்றி உடம்பு மெலிவுற்றாள், துன்புற்றாள், பலவித எண்ணங்கள் எண்ணினாள், வீட்டிற்கு வேண்டிய சாமான்களும் வர வரக்குறைந்து கொண்டே வந்தது. விஜயரங்கன் என் செய்வான் பிடித்து விட்டது சனி. வீட்டிற்கே வருவதும் கஷ்டமாகி விட்டது சில நாட்கள் வெளியிலேயே தங்கி விடுவான் ஒரு வாரத்திற் கொருமுறை கூட வீடு வருவது கடினமாக இருந்தது. விமலாவும்: விஷயம் அறியாது தவித்தாள், பயந்தாள், உடல் மெலிந்தாள், ஆகாரத்தை வெறுத்தாள். விஷயரங்கன் வீடு வந்த நேரம் விசாரிக்கவும் தலைப்பட்டாள்-நாதா! நீர் எதற்காகச் சில நாட்களாக வீட்டிற்கே வருகிறில்லை. இரவு பகலாகவா ஆபீசில் வேலையிருக்கிறது. என்னையும் இக்குழந்தையையும் இப்படித்தன்புறவிட்டு நீர் ஏன் இப்படி நடக்கவேண்டும், என்று கண்ணீர் சொரிந்தாள். விஷயரங்கன் கடுஞ் சொற்களையுஞ் சொல்ல ஆரம்பித்தான், உனக்கு அதுவிஷயங்கள். விசாரிக்க அவசியமில்லை. அதெல்லாம் அவசியம் சொல்ல வேண்டுமோ, என்று அதட்டி விடுவான் ஆம்! சொல்லத்தான் வேண்டும். நீர் இப்பொழுது வீட்டுக்கே வராமலிருப்பதால் நான் உமது விஷயங்களைக் கட்டாயம் அறிய வேண்டியது அவசியம். உமது மனைவியாகிய நான் அறியாது வேறுயார் அறிவது. உமக்குவரும் சுகதுக்கங்களில் பங்கு பற்றுபவள் நானே எனக்கே அந்தச் சுதந்திரம். என்று தாவசையும் மவுனமாகவும், சண்ணியமாகவும், அன்பாகவும் வார்த்தையாடிவந்த விமலா தன்கணவனை எதிர்த்தாள்.

விஷயரங்கன்:—அடி நாயே! உனக்கு இவ்வளவுவாயா, என்னுடைய விஷயம் உனக்குத் தெரியவேண்டியதில்லை உன் வேலையைப்பார்.

விமலா:—முன்னொரு போதுமில்லாதபடி எல்லாம் கடுஞ் சொற்களைச் சொல்லுகிறீர்களே அப்படியாகத் தங்களுடைய மனத்திற்கு விரோதமாக நான் என்னகுற்றஞ் செய்துவிட்டேன். நான் சதா உம்மையே சதமென நம்பி, என் இருகண்ணுகவே பாவித்து என் தெய்வமென நினைத்துப் பூசை செய்கிறேனே. நான் நம்பியிருந்தேனே.

விஷயரங்கன்:—வேறு பேச்சு வேண்டாம். சாதம் ஆய்விட்டதா பசியாயிருக்கிறது கொடு சாதம் நான் வெளியே செல்ல வேண்டும்.

விமலா:—சாதம் எங்கிருக்கிறது நான் சாதத்தைப் பார்த்து மெகு நாட்களாகிறது. என் உடல் வதங்குகிறது. வீட்டில் சாதம் செய்வதற்கு வேண்டிய சாமான்கள் கிடையாது, கையிலே பணமில்லை. என் வளையலை விற்றுச் சொற்ப பணத்தைக் கொண்டு என் குழந்தைக்குப் பால் வாங்கி வருகிறேன். இப்படிக் கஷ்டப்படுகிறது உமக்குத் தெரியாதா?

விஷயரங்கன்:—என்னிடம் பணமில்லை, உனது காசு மாலையைச் சீக்கிரம் கொடு அல்லாவிடில் உன்னை உதைத்து வெளியே தள்ளி விடுவேன்.

விமலா:—இதோ இருக்கிறது எடுத்துச் செல்லும்.

சீ! எழுதை கையில் கொடுப்பதா, இப்படி வீசி எறிவதா என்று எழுந்து தன் காலால் உதைத்துத் தள்ளி விட்டுக் காசு மாலையையும் கையிலெடுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

விமலா என்ன செய்வாள்! பாவம்-மெகு நாட்களாக அன்னம் தண்ணீரின்றி வாடி தங்கிப் புண்பட்டிருந்த உடல் உதை தாங்குமோ. ஆவென்றலறிக் குப்புற விழுந்தாள். கண்ணீர் சொரிந்தாள் துக்கம் மேலிட்டால் வாய்பேசாது அப்படியே இருந்துவிட்டாள் சிறிது நேரங்கழித்து எழுந்துபோய்ப் படுக்கையில் படுத்துப்புரண்டு கண்ணயர்ந்தாள்.

பொழுது விடிந்ததும் எழுந்து கணவனின் மேசை லாச்சியில் சிறிது நேரம் சோதனை செய்தாள், பின் தன்னறையில் சென்று தன் ஆடை ஆபரணங்களையும் சோதனை செய்தாள். தன் வைரக் கம்மலைக் காணாது தவித்தாள். பின் ஒரு வாறு துக்கத்தை ஆற்றிக்கொண்டு வேலைக்காரி

கண்ணம்மாளை அழைத்துப் பின்வருமாறு சொன்னாள். ஐயாவும் வேலையினிமித்தம் வேறு ஊருக்குப் போக வேண்டுமாம் திரும்புவதற்கு வெகு நாட்கள் செல்லும். நானும் போகிறேன் நீ உன் வீட்டிற்குச் சென்று உன் சுற்றத்தாரோடு இரு. பின்னால் திரும்பி வந்தவுடன் உன்னை வேலைக்கமர்த்திக் கொள்கிறேன். கண்ணம்மாளும் உண்மை யென நம்பி விடை பெற்றுக்கொண்டு தன் வீடு சென்று விட்டாள்.

விமலா தன் தாய் தந்தையரிடமிருந்து இன்புற்ற காலம் போய்த் தன் கணவனே சதமென நம்பி மோசம் போய்விட்டாள். இல்லறத்தை வெறுத்தாள்.பயித்தியங்கொண்டாள். தன் குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக் காரிபோல் வேடந்தரித்துத் தன் இல்லத்தை விட்டேகினாள்.

சில நாட்கள் சஞ்சரித்து விஷயரங்கள் வீடு வந்து பார்த்தான். விமலாவைக் காணவில்லை, கண்ணம்மாளையும் காணவில்லை. மனச்சஞ்சலமின்றி சற்று நிம்மதியாக இருந்து சனி தொலைந்தது என்று சொல்லி உள்ளம் பூரித்தான்.

நேயர்களே! விஷயரங்கன் எதற்காகத் தன் மனைவியை வெறுத்தான், வீட்டிற்கு வருவதற்கு ஏன் தாமதம். என்பனவற்றை நான் சொல்லாமலே விளங்கும். விஷயரங்கனின் சோரநாயகியாகிய தாசி ருக்குமணியின் காதலினால் இவ்வளவு கஷ்டம் விமலாவிற்கு நேர்ந்தது. விஷயரங்கன் தன் காதலியாகிய ருக்குமணியை தன் இல்லத்திற்கு வரவழைத்தான். தன் மனைவியின் ஆஸ்தி முழுவதும் தன் வசமானம் முழுவதும் ருக்குமணிக்கே கொடுத்து தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் உண்மையாகவே அர்ப்பணம் செய்தான். சில காலம் தன் காதலி ருக்குமணியுடன் இன்புற்றுச் சீவித்திருந்தான். ஆனால் ருக்குமணி தாசியாகபிறந்தபோதிலும் விஷயரங்கன் மேல் அதிக அன்புகொண்டு அவனுக்கே அன்றுதொடக்கம் வாழ்க்கைப்பட்டிருந்தாள். விஷயரங்கனுக்கு வேறு ஒரு மனைவியும் குழந்தையுமிருப்பது அவளுக்கே தெரியாமலிருந்தது.

இப்படியே சில காலம் கழிந்தது. ஓர் நாள் அவ்வூர் விவேகானந்த ஆச்சிரம மண்டபத்தில் பெண்கள் முன்னேற்றத்தைப்பற்றி ராதாவென்ற ஒரு சன்யாசினியால் பிரசங்கம் செய்யப்படும் என்ற ஒரு விளம்பரம் அவ்வூர்ச் சனங்களுக்குக் கிடைத்தது. அவ்விளம்பரத்துண்டு ஒன்று எங்கள் விஜயரங்கன் கையிலும் எட்டியது. தன் இரு கண்மணியான ருக்குமணியையும் அழைத்துக்கொண்டு அப்பிரசங்கத்திற்குப் போவதென முடிவுசெய்து ருக்குமணிக்கும் தெரிவித்தான். குறிக்கப்பட்ட தினமும் வந்தது திரளான சனங்கள், அநேகமாகப் பெண்களே, கூடியிருந்தனர். அவ்விடம் விஜயரங்கனும் ருக்மணியும் போயிருந்தனர். ராதா என்ற சன்யாசினியின் வரவை ஆவலோடு எதிர் பார்த்திருந்த சனக்கூட்டத்தின் நடுவில், கதருடையணிந்து, மெலிவடைந்த தேகத்துடன், ஆபரண அலங்காரங்களின்றி எமது கதாநாயகியாகிய மாறுபெயர்பூண்ட ராதாவும் பிரசங்க பீடைமேல் வந்து நின்றாள்.

ராதாவைக் கண்ட சனக்கூட்டமும் பலவிதமான வேடிக்கையான பேச்சுகளை ஆரம்பித்து, இவளாவது பிரசங்கம் செய்வதாவது, படித்த பெண்ணுகளே காணப்படவில்லை. வீணே வேறு வேலைகளையும் விட்டுப் பிரசங்கம் கேட்டுப்போக லாமென வந்து ஏமாந்தோமே, என வார்த்தை யாடிக் கொண்டிருந்தனர். சிலர் வீடுசெல்வதற்கு எழுந்து நின்றனர். சிலர் வெளியே போவென்று கூக்குரலிட்டனர். சிலர் இப்பெண் எந்தப் பட்டிக்காட்டாளோ தெரியவில்லை. இவளுக்கு வாய் பேசவே தெரியாது என்று கர்ஜித்தனர். இவைகளெல்லா வற்றையும் பொறுமையுடன் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்த சன்யாசினி ராதாவும் மௌனமாயிருந்தாள். விமலாவென்னும் ராதா தன் தாய் தந்தையர்களிடமிருந்த இன்புற்ற வாழ்க்கை போய்விட்டது. பட்டாடைகள் போய்விட்டது. இரத்தின ஆபரணங்கள் போய் விட்டது. சந்திரனை ஒத்த முகக்காந்தியின் ஒளி மழுங்கியது. இல்லற வாழ்க்கையின் இன்பமெல்லாந் துன்பமாயிற்று. பார்ப்பவர் மனதைக் கவரும் ஆடைஆபரண அலங்காரமாக மேடையில் நின்று பிரசங்கம் செய்பவர்களைப் போலல்லாது கதருடையணிந்து அருவருக்கத்தக்க தோற்றத்துடன் சன்னியாசினி வெளித்தோற்றத்திற்குக் காணப்பட்டாலும் அவள் கற்ற கல்விமாத்திரம் அவள் உள்ளே நின்று பிரகாசித்தது. பட்டணத்தின் இந்துபெண் கல்லூரியில் படித்துப்பாண்டித்தியம் பெற்ற அவள் கல்வி ஒருபோதும் மங்கவில்லை. இவ்வுண்மையை அங்கு குழுமியிருந்த கற்றறிவாளரே அறிவர். "கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" என்ற முதுமொழிக்கிணங்க அவ்விடமிருந்த கற்றறிவாளர்களே அமைதியாக ராதாவின் பிரசங்கத்தை எதிர்பார்த்தனர்.

ராதாவும் அக்கற்றவர்களின் காதோஷத்தினிடையில் எழுந்து நின்று நமஸ்கரித்துப் பேச வாரம்பித்தனள். என் சகோதர சகோதரிகளே! நானின்று இவ்விடம் வந்து என் அறிவிற்கெட்டியவரை "பெண்கள் முன்னேற்றம்" என்ற விஷயத்தைப் பற்றிச் சிறிது சொற்பொழிவு செய்யவும் இங்குகுழுமியிருக்கும் உங்கள் எல்லோரையும் பார்த்து என்னுள்ளம் பூரிக்கவும் செய்த பரந்தாமனுக்குத் துதிசெலுத்துகிறேன் என்று

சொல்லி சொற்பொழிவை யாரப்பித்தாள். சொற் பொழிவிற்கிடைகளில் தேன் ஒழுகும் கீதங்களும் பாடி அவைகளுக்குத் தகுந்த உவமைகளும் கருத்துகளும் எடுத்துகூறி அவ்விடமிருந்த கற் றறிவாளர்களையும் கல்வியில்லா மூடரையும் பிர மிக்கச் செய்தாள். பிரசங்கமும் ஒரு பணித்தியா லமாக நடைபெற்றது. எல்லோரும் ஆவலாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இவர்களுள் நம் விஜயரங்கனும் ருக்குமணியு மிருந்தார்கள் என்று மேலே சொல்லியிருந்தேன்.

விஜயரங்கன் சிறிது சிறிதாகத்தன் ஐம்பொறி களையுமிழந்தான். வாடினன், வதங்கினன் விமலா வுடன் இன்புற்று வாழ்ந்த நாட்கள் அவன்எதிரில் தோன்றின. கடைசியில் தன் அறிவை இழந்து நாற்காலியிலிருந்து சாய்ந்தான். பிரசங்கமும் முடிந்தது.

சன்யாசினியும் விடைபெற்றுத் தன் ஆச்சிரமம் சென்றார். மண்டபத்தில் கடைசியாக யிருந்தவர் கள் விஜயரங்கனும் ருக்குமணியுமே. ருக்மணி க்கு விஷயம் ஒன்றுமே தெரியவில்லை. தன் கணவ னுக்குச் சந்தியில் ஏதோ சுரங்கண்டு விட்டதென்று ஏங்கினள். சிலநேரங்கழித்து விஜயரங்க னும் ருக்குமணியும் தம் வீடுசேர்ந்தனர். விஜய ரங்கனும் தன்மனைவி விமலாவையும் குழந்தை யையும் நினைத்துவருந்தினன். ருக்குமணியும் விஷ யங்களாவும் அறிந்தாள். தனே இக்குடும்பத் துக்குத் தீங்குவினைவித்தது என்றுஏங்கினாள். இவர்களிருவரையும் தனே சேர்த்து வைப்பது அல்லது உயிர்துறப்பது எனச்சபதம் செய்தாள்.

விஜயரங்கனுக்குச் சுரம் வாட்டுகிறது, விமலா வின் அன்பையும் தான் அவளுக்குச் செய்ததன் பத்தையும் நினைந்து வருந்தி அன்னம் ஆகார மின்றிப் படுக்கையில் படுத்து விட்டான். எழுந்தி ருக்கமுடியாத நிலையில் அவன் துன்புற்றிருக் கும் நேரம் ருக்குமணியும் அவனே விட்டகன்றாள்.

ருக்குமணி தான்செய்த சபதத்தின்படி உடனே நேராகச் சன்னியாசினி தங்கியிருக்கும் ஆச்சிர மத்தையடைந்து சன்யாசினியை வணங்கி அம்மா, தாயே! உம்மிடம் சில புத்தி மதிகளைக் கேட்க லாமென்று வந்தேன். தாயே! ஒருகணவனும் மனைவியும் இல்லறம் நடத்திவருகிறார்கள், கண வன் மனைவியை வெறுத்து வேறொரு பெண்ணை விரும்பி நட்பாக யிருந்துவரும்பொழுது முன்ம னைவி இல்லறத்தைத் துறந்து துறவறம் பூண்டு நிற்கிறாள். பின் அக்கணவன் தான் செய்தது தவறு என்று நினைத்து வருத்தமுற்று முன் மனைவியிடத்தில் சென்று மன்னிப்புக்கேட்டால் அம்மனைவி பின் அவருடன் சேர்ந்து வாழலாமோ வனக்கேட்டாள். சன்யாசினியின் சொந்த வாழ்க்கையும் உடனே கண்முன் தோன்ற சற்றுத் தயங்கிப் பின் எழுந்து அம்மா! அப்படிப் பின் னவளை வெறுத்து முன்னவளை அடைந்து விரும்பிக்கேட்டால் கணவனையிற்றே என்று மனமிரங்கிச் சேர்ந்து இல்லறம் நடத்தலாம். ஆனால் இவ்விஷயத்தில் ஒவ்வொருவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. அம்மா! சரி என்று விடைபெற்றுச் சென்று தன் கணவனைச் சீக்கிரம் விமலாவிடம் அனுப்பி விடலாமென்று சென்றாள் ருக்குமணி.

விஜயரங்கன் நோயின் கஷ்டத்தினால் தாகத்தி ற்கு நீர் கொண்டுவரும்படி ருக்குமணியை அழைத்தான். அவ்விடம் ருக்குமணியுமில்லா ததைக்கண்டு, ஐயோ ஈசனே "இருகையும் விட் டேன் பெண்களே" என்று கதறி படுக்கையில் விழுந்து புரண்டு நிலத்தில் விழுந்து உயிர்த்துறந் தான். ருக்குமணி சன்னியாசினியிடம் விடை பெற்றுத் தன் கணவன் நிலமையைக் கவனிக்க ஓடோடியும் சென்று, தன் கணவன், இறந்திருப் பதைப் பார்த்து ஓவென்றலறினாள். தானே இவை எல்லாவற்றிகும் காரணம் என்று கிணற் றில் விழுந்து உயிர நீத்தாள். விமலா தன் புத்தி ரனுடன் ஆச்சிரமத்திலிருந்து கிவத்தொண்டு செய்து சில காலமிருந்து சிவபதம் சேர்ந்தாள். என்னே இல்லற வாழ்க்கையின் விபரீதம்!

—லீலாவதி

ஆரோக்கியமும் பெண் மக்களும்

ஆரோக்கியமே ஆயுள் விருத்திக்கு அஸ்திவாரம் போன்றது. ஆரோக்கியக்குறைவினால் நோய் கோடிகளும், இவற்றால் அகால மரணமும் ஏற்பட இடமுண்டாகிறது. ஆரோக்கியமே மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்வதற்குச் சரீரம் முக்கியமென்றும், இச்சரீரத்தை நோய்வாய்ப்படாது காப்பதற்கு ஆரோக்கியமே அவசியமென்றும், இவ்வாரோக்கியத்தை மனிதன் கைவிடாது கவனித்து வருவதன் பொருட்டு, ஆசாரம் என்ற கட்டுப்பாட்டை நமது பெரியோர் சாத்திரங்கள் மூலமாகவும், சம்பிரதாய மூலமாகவும் ஏற்படுத்தியிருக்கின்றனர். அனுஷ்டான முறைகளைப் பற்றிக் கூறும்போது "ஆசாராய சுகாயச" என்று ஒரு பழமொழியும் வழங்கி வருகிறது. ஆனால் நாகரீக வாழ்க்கையின் முதிர்ச்சியால் பல துறைகளிலும் ஆரோக்கியவழி புறக்கணிக்கப்படுகின்றது. எங்கெங்கு நாகரீக வாழ்க்கை நர்த்தனமாடுகின்றதோ அங்கங்கு தேகவன்மையும் சரீரபலமும் குன்றி இருத்தலைக் காணலாம். தீர்க்காலாயுசினையும் தைரியமும் வேண்டுமானால், சரீர சுகம் வேண்டும். சரீரம் சுகமாயிருத்தலுக்கு நோய் அணுகாதிருக்க வேண்டும். நோயுறுமலிருப்பதற்கு ஆரோக்கியம் வேண்டும். ஆரோக்கியம் நிலைப்பதற்கு அவரவர்களின் அனுஷ்டான முறைகள் ஒழுங்காயிருத்தல் முக்கியமாயினும் ஆரோக்கியம் நிலைப்பதற்குப் பெண்மக்களே மூலகாரணமாவார்கள். பெண்கள் பருவ வயதில் மனோவியாகவும் இருப்பதினால் ஆடவரின் தேகாரோக்கியம் பெண்மக்களிடமே ஒப்புவைக்கப்பட்டிருக்கிறது. ஆரோக்கிய மெனப்படுவது முக்கியமாக உணவு விஷயத்தில் அடங்கியிருக்கிறது. ஜீவராசிகளில் சிறந்தவர்களான மனிதர்களின் வாழ்நாள் ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதினாலும், இவ்வாரோக்கியத்தைச் சிறிதும் சிதறவிடாது கவனித்து வரக்கூடிய தன்மை பொறுமை வாய்ந்துள்ள பெண் மணிகளிடமே இருக்கிறதென்ற கருத்தை வைத்து இல்லாள் என்ற பதவியை நம் பெண்கள் பெற்றிருக்கின்றார்கள். தற்கால நாகரீக வாழ்க்கையானது மேற்பார்வைக்கு அழகாகக் காணப்படுகிறதன்றி உள்ளூரச் சுத்தமும், சுகமும் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலைமையில் நமது பெண் மக்கள் ஆரோக்கிய வழியை நன்கறிந்து கொள்ளாது புறக்கணித்து விடுவார்களானால் கூடிய சுறுக்கில் உலகமே நோயின் உருவமாகிச் சன சமூகம் அழிந்து விடத் தடையில்லை. பெண்கள் முன்னேற்ற மடைய வேண்டும், பெண்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்று வாய் மொழியில் பேசி வருவதைக் காட்டிலும், பெண்கள் ஆரோக்கிய வழியைக் கடைப்பிடைத்து நடக்கக்கூடிய போதனைகளை இளமையிலிருந்து கல்விச்சாலை மூலமாகவும், மத்திய வயதில் நம் தேச பாஷையில் எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களின் மூலமாகவும் பரவச்செய்தல் இன்றியமையாததாகும். ஜன சமூகத்தின் வாழ்க்கையானது நவ நாகரீகத்தைப் பின் பற்றி நடத்தப்படினும், அவற்றில் ஆரோக்கியவழி அடங்கியிருக்கின்றதா வென்பதை ஆலோசித்து நடப்பதில், ஒவ்வொருவருக்கும், சிரத்தை இருக்கவேண்டும். ஆகாரபண்டங்களை அன்றாடம் கவனிப்பதில் பெண் மக்கள் முழுக்கவனத்தையும் செலுத்தாதவரை ஆரோக்கியமானது நிலைத்திருக்கவே முடியாது. சாமான் அறையை அன்றாடம் பார்வையிட்டுச் சமையல் வேலையைத் தம் கையால் செய்து வரும் ஏழைகளின் வீடுகளில் ஆரோக்கியம் மிகுந்திருப்பதைக்காணலாம். வீட்டு வேலைகளைச்செய்வதால் சரீரப்பயிற்சி ஏற்பட்டு அதனாலும் இவர்கள் சுகமாய் ஜீவிக்க இடமுண்டாகிறது. இத்தகையாருக்குப் பீச்சுக் காற்றும், மாலையுலாவுதலும், தனிப்பட்ட சரீரப்பயிற்சியும், விதமான (டானிக்) மருந்துகளும், வைத்தியர்களின் மருந்துப் புட்டிகளில் அடைத்து வைத்திருக்கும் அக்கினித் தீபனம், ஆரோக்கியம் இவைகளைக் கைக்காசு கொண்டு விலைக்கு வாங்குதலும் அனாவசியம். தனவந்தர்களின் வீடுகளில் இத்தகைய இயற்கைச் சௌகரியங்கள் சிறிதுமிருப்பதில்லை. நாகரீக முதிர்ச்சியின் பயனாக சிலருக்குச் சாப்பாடு தயாரிக்கப்படும் விதமோ சமையலறையோ, சாமான் வைக்கும் இடமோ ஒன்றுமே தெரியமாட்டாது. சாப்பிடும் அறையில் வேலைக்காரர்களால் அளிக்கப்படும் உணவையும் இது ஜீரணிப்பதற்காக டாக்டர்கள் அளிக்கும் மருந்துகளையுமே தஞ்சமென நம்பி இருப்பார்களாயின் ஆரோக்கியம் ஆகாயத்தில் ஒளிந்தமலாது இவர்கள் வசம் இருக்குமா?

இலட்சாதிபதிகளாயிருப்பினும் கிராம வாசங்களில் மிகுதியாகவும், நகர வாசங்களிற் சிற்சில விடங்களிலும் குடும்பக்காரியங்களை அநேகமாகத்

தாங்களே நிர்வகித்தும், வேலையாட்கள் இருப்பினும் தாங்கள் சகல காரியங்களையும் மேற்பார்வை பார்த்துவரும் பெண்மணிகளே இன்றைக்கும் நாம் கண்கூடாகக் காணலாம். இதற்கடுத்தபடியாகக் குழந்தை வளர்க்க வேலைக்காரரை நியமித்தலாகும், இளமையிலேயே ஆரோக்கியம் குறைந்துவிட நேரிடுகிறது. சுவற்றை வைத்துத்தான் சித்திர மெழுதமுடியுமானதுபற்றி ஆடை, ஆபரணம், வாகனாதிகள் இவைகளின் பெருமையை நன்கனுபவிக்க நம் பெண்மக்கள் விரும்புவார்களாயின் இவைகள் கிடைப்பதற்குக் காரணர்களாயுள்ள ஆடவர்களின் தேகாரோக்கியமும் அவசியமாயிருக்கின்றதென்பதை உணர்ந்து தங்கள் குழந்தைகளை இளமையிலிருந்தே திடசரீரத்துடன் வளர்த்துவரக் கூடிய வழியைச் சிந்திப்பார்களாக.

சி. இரத்தினம்.

- ஏழ்மை நிலை -

இன்று யாழ்ப்பாணத்தில் ஏழ்மை நிலையே தாண்டவமாடுகின்றது. கொலை, களவு, கட்காமம், குரோதம் முதலிய பஞ்சமா பாவங்கள் மலிந்து நிகழ்கின்றன. தொழிலின்மையும் வறுமையுமே காரணம்.

இந்த நிலைக்கு நாமே காரணர். ஆனால், பொதுவாக மக்கள் நன்னிலையை யடைவதும் பிற்போக்கடைவதும் தேசத் தொண்டு செய்வோரைப் பொறுத்ததெனலாம். நமது நாட்டில் தேசத் தொண்டு சரியான முறையிற் செய்வோர் யாருமிலர் என்றே கருதுகிறோம். பொது சன நன்மைக்காக அறிவுடையோர் தேசத் தொண்டு செய்வதியல்பு. சுய நலங் கருதாது தேசத் தொண்டு செய்தல் தேச பக்தர்கள் கொள்கை. நமது தேசத்தில் சுய நலங் கருதாது தேசத் தொண்டு செய்வோரில்லாததிற்றான் தற்காலத்தில் கீழ் நிலையை நாம் அடைந்திருக்கிறோம். வியாபாரம், கைத்தொழில், கமத்தொழில் முதலிய அம்சங்களில் ஈடுபடப் பின் நிற்கும் நாடு முன்னேறுவது எவ்விதம்?

இதர தேசங்கள் கமத்தொழில், கைத்தொழில், வியாபாரம் முதலிய பல துறைகளில் ஈடுபடுவதால் அல்லவா முன்னேறுகின்றன.

பிரதானமாக அரிசியும் துணியும் எங்கிருந்து வருகிறதென்பதைப் பார்ப்போம். இவை அயல் நாடுகளிலும் அன்னிய நாடுகளிலுமே இருந்து வருகின்றன. இவற்றை இறக்குமதி செய்து நமது ஊரவர்களுக்கு விற்பவர்களும் அன்னியரே. இப்படியே வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் பிற தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுப் பிற தேசத்தவர்களாலேயே விற்கப்படுகின்றன.

இன்னிலையில் நமது நாட்டுச் சிறார்கள் ஏடு காவித் திரிந்து வாலிப வயதானவுடன் திண்ணைகளுக்கும் தெரு வீதிகளுக்கும் பாரமாகக் காணப்படுகிறார்கள். இத்துடன் நில்லாது கொலை, களவு, கட்காமம், குரோதமென்னும் இழிவும் ஈனமும் பொருந்திய மோச நாசச் செயல்களில் ஈடுப்பட்டு நாட்டுக்குப் பெரும் தின்மைகளையும் விளைக்கிறார்கள். குடியையும் சோம்பலையும் இடம்பத்தையும் ஊரை விட்டு அகற்றும்வரைக்கும் எமக்கு மீட்சியேயில்லை. பாழும்குடியென்னும் பிசாசு எப்படி நம்மவரை ஏழ்மைப்படுத்துகிறதோ அதுபோலவே ஸ்ரீதனப் பிசாசும் நாட்டைச் சின்னபின்னப்படுத்துகிறது.

தற்காலப் பெண்களுக்கு, மஞ்சள் உடம்புக்குக் கொடுக்கும் குணத்தையும் அழகையும் பற்றித் தெரியாதென்றது எமது துணிபு. காலை முதல் இரவில் சயனத்துக்குப் போகும்வரைக்கும் தினம் பலதரம் முகத்துக்கு மா என்றுசொல்லப்படும் ஓர் வகைப் புழுதி போடுவது ஒரு பெரும் வேலையாக்கிக் கொண்டனர். ஆடவர்களும் முகத்துக்கு மா, போடுகிறார்களாமே. இது மடமையோ! விந்தையோ! நமது வாலிபர்கள் வாயில் வெள்ளைச் சுருட்டில்லாமல் சிநேகிதர்கள் முகத்தைப் பார்க்கமாட்டார்கள். தினம் குறைந்தது ஆறுதரமேனும் கோப்பி, தேனீர் பருகாது ஜீவியத்தைக் கழிக்கமாட்டார்கள். இப்படி வாழ்நாளை வீணாய்க் கழிப்போர்க்கு நோய் வறுமை அணுகாதிருக்க இடமுண்டோ?

கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியன கைகூடவிட்டபடியால் நமது வீடுகள் குசேலர் வீட்டினும் கேவலமாகத் தோன்றப்படுகின்றன. பொருட் செல்வம்தான் குன்றி வருகிறதென்று அருட் செல்வம் பெருகி வருகிறதா? நமது நாட்டில் சமய ஞானமும் சமயப் பற்றும் கடவுள் விசுவாசமும் பெருகி வருகின்றனவா? இல்லை என்றே நாம் துணிவாய்க் கூறுவோம்.

அன்றேல் கொலை, களவு, கட்காமம், குரோதம் கூடிக் கொண்டு வருவதற்கு நியாயமில்லை. சமயப் பற்றும் கடவுள் விசுவாசமும் உடையவர்கள் அருமையிலும் அருமை எனில் பிழையாகாது.

நாம் வழிபடும் தெய்வங்கள் ஆடு கோழிகளுடைய இரத்தத்தைக் குடித்து ஊனைப் புசிக்கிறார்களென்று எண்ணுகிறோம். மனதை ஒரு வழிப்படுத்தி அவன் அருளை வேண்டி இருகை கூப்பிப் பிரார்த்தித்து ஈடேறுவதற்காக ஏற்பட்ட சன்னிதானங்களை நாடகமேடைகளாக்கிக் கொள்ளுகிறோம். கோயில்களில் ஆடு கோழிகளை வெட்டிச் சரித்து வருவதாலும், நாட்டிய மாதரைச் சன்னிதானங்களில் நடிக்க விடுவதாலும், வாணவேடிக்கைகளைச் செய்து கொண்டாடுவதாலும் நாம் அறிவுடையோராய் விளங்குவோமா? இதனால் நாட்டுக்குப் பெரும் தீங்கையும் அபகீர்த்தியையும் செய்கிறோம் அல்லவா?

நமது நாட்டில் சன சமூகத்துக்காக உழைக்கும் பொறுப்பு வாய்ந்த பெரியோர்கள் தற்சமயமில்லாவிட்டாலும் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சுயநலம் கருதாது தமிழ் உலகிற்காகப் பெரிதும் உழைத்தார். இற்றை உலகப் போலித் தலைவர்களைப் போலல்லாமல் பிறர்க்காகவே செய்கையிலும் உபதேசத்திலும் விளங்கினர். இவரை நாம் பின்பற்றி நடக்கலாம். இவர் பின்னோர் பொன் இராமநாதனவர்கள் தலை சிறந்து விளங்கினர். இவரும் பேச்சில் மாத்திரமல்ல செய்கையிலும் தலைவராகவே நமக்கு வழிகாட்டி, தான் செய்வதைப் பின்பற்றி நடவுங்கள் என்றதையே வற்புறுத்திச் சென்றார். நாம் கடவுட் பற்றும் தேசப்பற்றுமுடையோராயிருந்தால் இவர்களைப் பின்பற்றி நடந்து நமக்கும் நமது தேசத்துக்கும் நன்மைப்பட வாழலாம்.

நமது பரத கண்டம் சிறப்புற்றோங்குங்காலம் தொடங்கிவிட்டது. நமது இந்திப் பெரியார்கள் தேசத்தொண்டு செய்யும் முறையில் துறவறம் பூண்டவர்கள்போலச் சுயநலம் விரும்பாது அல்லும் பகலும் பொதுசனத்துக்குபகாரிகளாக வாழ்கிறார்கள். தமது உடல் நலத்தை வெறுத்து தேசமுன்னேற்றத்துக்காகப் பாடுபடும் பெரியார்களை நாம் பின்தொடர்ந்து வாழக்கூடாதா?

இந்தியாவில் பெண்கள் எவ்வளவு தீவிரமாக முன்னேறி வருகிறார்கள். அவர்கள் விலையுயர்ந்த ஆடைகளை வெறுத்துத் தள்ளி வருகிறார்கள். ஆபரணங்கள் அணிவது மிலேச்சர் செயலும் அடிமைத்தனமுமென்று எண்ணுகிறார்கள். பலதுறைகளிலும் தேசத் தொண்டு செய்கிறார்கள். உடலுக்கு அணி அருட்பணி என்று கருதுகிறார்கள். மனதிற்குச் சுத்தமும், அருளும் அவன் அன்புமே அணியென நம்புகிறார்கள். எழிய்வாக்கையே இனியவாழ்க்கை என்றது மகாத்மா கொள்கை அவர் ஆங்கிலத்தில் "If you increase your wants & needs, you increase your cares & worries" என்று சொல்வது வழக்கம்.

ஒவ்வொருவரும் சரியான முறையில் அருட் செல்வமாகிய நமது தேனினுமினிய, அமிழ்தினும் இனித்திக்கும் தமிழைக் கற்றுப் பெரியோருடைய போதனைகளைப் பின்பற்றிச் சிலியத்திற்கு வேண்டுவனவற்றைப் பொய்களவு தவிர்த்துச் சம்பாதித்து வாழ்நாளைச் செய்வனே நடாத்திக் கடவுள் விசுவாசமாக இருப்போமானால் நமக்கு இடர்வர இடமில்லை.

நாமே நமது வறுமைக்குக் காரணர். நமது நாட்டில் பரித்தியும் நெல்லும் விளையாதா? குடா நாட்டில் போதிய நிலமில்லாவிட்டால் இலங்கையின் மற்றப்பாகங்கள் இடம் கொடாதா? பூநகர், பூம், நகராய்க் கிடக்கின்றனவே! செந்நெல் விளைந்த வன்னியெல்லாம் வீண்காடாய்க் கிடக்கின்றனவே! மலையா பேனைப்பிடித்து எழுதுவோர்க்கிடம் கொடாதெனினும் கலப்பை மண்வெட்டி பிடித்து உழுவோர்க்கு மிடங்கொடாதா?

உலகத்தில் நாம்தான் வியாபாரம் செய்யத் தெரியாதவர்களாக என்றென்றைக்கும் மிருத்தல் வேண்டும்? நமது நாட்டுமாதர்கள் பொழுது போக்காகவேனும் சிறிய கைத்தொழில்களையாகுதல் படித்துக்கொள்ளக்கூடாதா?

நாம் வாழ்க்கைக்குப் பொருத்தமில்லாத அனுவசியமான பழக்க வழக்கங்களைக் கைகழுவித் தள்ளிவிட வொண்ணுதா? சோம்பலையும் இடம் பத்தையும் ஊரைவிட்டுத் தூரத் துரத்தவேண்டும். நமது சனசமூகத்தை வருத்தும் பாழும் குடிப்பிசாசை அறவே ஒழிக்க ஒண்ணுதா? எங்கே பெரிய ஸ்ரீ தனம் கிடைக்குமென்று வேட்டையாடித் திரியும் வாலிபர்கள் திருந்தலாகாதா? கல்வி கேள்விகளால் நல்லறிவைப் பெற்று ஸ்ரீ தனத்துக்காக விவாகம் செய்வதைத் தவிர்ப்போமாக! பெண்கள் உயர்தரக்கல்வி அறிவைப்பெற்றுக் கைவிலங்கு கால்விலங்கு பூணும் அடிமைத் தனத்தைத் தவிர்த்தல் வேண்டும். இவ்வண்ணமே, மேலான எண்ணமுடையவர்களாய்ச் சுயபாஷையைக் கற்பதாலும், சமய நூல்களை ஆராய்வதாலும், பத்திரிகைகளை வாசிப்பதாலும் நாமும் ஒரு அளவுக்கு முற்போக்கையடையலாம்

மனம்போன போக்கெல்லாம் போகாது வயிற்றுப்பிழைப்புக்கு நேர்மையான வழியில் எத்தொழிலையும் கூசாது செய்தல் நலம். பேனைபிடித்து

எழுதும் தொழிலே அனைவரும் விரும்பி நிற்பதால் நாம் தரித்திரத்தில் மூழ்கிப்போவோம் என்றெண்ணிற்றவறல்ல. நமது தேவைக்கு காமே நூல்நூற்று ஆடையை நமது நாட்டில் நமது கையால் நெசவு செய்து அணியும் வரைக்கும், நமது உணவை நமது நாட்டிலேயே உண்டு பண்ணிக்கொள்ளும் வரைக்கும் நமது வறுமை நம்மை விட்டகலாது. ஏழ்மை தாண்டவமாடாமல் வீலக இடமில்லை.

யாழ்ப்பாண ஐக்கிய சங்கத்தார் இந்த வருட ஆதாயத்தை முதலாகக் கொண்டு பினையை மூலதாரமாகக் கொண்ட பொருட்களை மலாயாவிற்குத் தருவித்து வியாபாரம் செய்வார்களானால் நமது நாட்டு ஏழை மக்களுக்குப் பிழைப்பாகும். பினையின் மாண்பை நாம் பிறந்த நாட்டிற்கும் புகுந்த நாட்டிற்கும் நாட்டலாம். இந்த மார்கழிமாசம் ஆங்கிலத்துக்கு 14-ம் திகதி முதற்கொண்டு அகில இலங்கை உணவுச் சுகாதாரப் பொருட்காட்சி கொழும்பில் 21 நாட்களுக்கு நடைபெறுகிறது. இந்தப்பொருட்காட்சியில் பனம் பண்டங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உள்நாட்டுப் பொருள்களை உபயோகிப்பதாலும், சோம்பலை விடுத்து பெரிது சிறிது என்ற பாகுபாடில்லாமல் கிடைக்கக்கூடிய எத்தொழிலையும் நாம் பின் நிற்காமல் செய்வோமானால் நமது நாட்டில் ஏழ்மை தாண்டவம் ஆடாது. அல்லது நமது நிலைநாளுக்கு நாள் பரிதாபத்திற்கிடமாகவே போய்க்கொண்டிருக்கும் அன்பர்களே! விழிமின்! எழுமின்! ஈசன் அருள்புரிவாராக

வ. நடராசா.
ஈப்போ.

பொறையுடைய மாதர்

இப்பூவுலகின் கண் எல்லா ஜீவன்களையும் படைத்துக் காத்துவரும் ஈசன், மனுஷனை மாத்திரம் அற்புத சிருஷ்டியாகப் படைத்து அவன் மூலமாகவே தமது மகத்துவம் விளங்க வேண்டிய ஞானத்தைக் கொடுத்திருக்கிறார்.

நாம் இந்த உலகில் இருக்கும் வரைக்கும் நமக்கென்று வாழாமல், ஒவ்வொருவரிடத்தும் அன்புபூண்டு உத்தமர்களாய் ஜீவிக்கவேண்டும். நாம் சுயநலப் பற்றுடனே ஒவ்வொரு அலுவல்களிலும் எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ. அவ்விதமாகவே பிறரிடத்தும் நடப்போமாயின், ஈசனின் ஆசீர்வாதமும் அவரின் பிரசன்னமும் இருக்கும் என்பதற்குத் தடையில்லை. விசேஷமாக மனைவியானவளே ஒவ்வொரு குடும்பத்திலும் விசேஷித்தவளாக விளங்குகின்றாள். ஏனெனில் எல்லாவிதமான கஷ்டங்களையும் பொறுக்கக் கூடியதன்மையை ஆண்டவன் அவளுக்கே கொடுத்திருக்கிறார். உண்மையும் ஒழுக்கமும் உள்ள மனையாள் ஒவ்வொரு குடும்பத்திலும் இருப்பாளேயாகில் என்னவிதமான கஷ்டங்கள் நேரிட்டபோதிலும் எல்லாம் பருதியைக்கண்ட பனிபோல் அகன்றுவிடும். கொண்ட கணவனுக்குத் துரோகம் நினையாமலும், ஒவ்வொரு அலுவல்களிலும் அவர்களை மதித்து அவர்கள் மனம் நோகாமல் நாம் மரிக்கும் பரியந்தம் உண்மையுடன் நடத்தல் வேண்டும். பொறையுடைய மாதர்களின் சரித்திரங்கள் நமது சகோதர சகோதரிகள் எத்தனையோ வாசித்திருந்தபோதிலும் எனது சிற்றறிவுக்கு எட்டியதை இங்கு எழுதலானேன்.

இலங்காபுரியின் பூர்வீகராசதானியாகிய பொல்லநுருவா, என்னும் இடமானது பார்ப்போர் மனதைக் கவரத்தக்க வனப்புவாய்ந்த நகரம். அங்கே அநேக மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், தடாகங்களும், அநேக விதமான நந்தவனங்களும் அமையப்பெற்றுள்ளது. அங்கே விதவிதமான பட்சிசாலங்களும், காட்டு மிருகங்களும் எவ்வித பயமுமின்றி வசித்துவந்தன. அப்படிப்பட்ட அழகான நகரை பராக்கிரபாகு என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் தனது குடிஜனங்களை அதிக அன்புடன் வைத்துக் காப்பாற்றினதுமன்றி, அவர்களுக்கு வேண்டிய கல்விச் சாலைகளையும், தொளிற் சாலைகளையும், ஆலயங்களையும் ஸ்தாபித்துக்கொடுத்தான்.

அங்கே ராமநாதன் என்னுமொரு குடியானவன், கனகவல்லி என்னுமொரு பெண்ணை மணந்து அதிக சந்தோஷமாக இல்லறம் நடத்திவந்தான். கனகவல்லியானவள் உத்தம பெண்களுக்கேற்ற குணங்கள் அமையப்பெற்றவளாயும், கசடறக் கற்றவளாயும் அழகுள்ளவளாயுமிருந்தாள். ராமநாதனின் பெற்றோர் தங்களுக்குண்டான சொற்ப நிலங்களையும், பொருட்சலங்களையும் தங்களது ஏகபுதல்வனுக்கே கொடுத்துவிட்டுப் பரகதி யடைந்தார்கள். தனது தாய் தந்தையர் தேடிவைத்த நிலங்களைப் பண்படுத்தி அதின் மூலமாகவே தனது ஜீவிபத்தைக் கவிக்கலானான்.

கனகவல்லியோ வெனில் பத்தாவுக்கேற்ற பதி விரதையாக அவனுடன் கூடச்சென்று வயலில் வேலை செய்வதும் தனது வீட்டு வேலைகளைச் சரி வரச் செய்வதும், ஒழிந்த நேரங்களில் தன்னால் ஆகக்கூடிய உதவியைத் தனது சுற்றத்தாருக்குச் செய்வதுமாகவே காலங் கழிப்பாள்.

சில மூடப் பெண்களைப்போல ஊர்ச் சண்டை, பிறரைப்பற்றிய நிந்தையான பேச்சு, தனக்குப் பிரயோசனமில்லாத அலுவல்களில் தலையிடுதல், பரிகாசம் செய்தல் முதலிய தூர்க்குணங்கள் அவளிடம் கிடையாது.

சகோதரிகளே! உண்மையைக் கூறுமிடத்து நிறைகுடம் தளும்பா குறைகுடமே தளும்பும் என்றபடி, கற்றோர்களும் அறிவாளிகளும் தங்களைப் பற்றி பெருமையானவைகளை எடுத்துரைக்கமாட்டார்கள். கற்றக்கற்றக் கசடறும். யாரிடத்தில் அகத்தூய்மையும் புறத்தூய்மையுமுளதோ அவர்களே கல்விமான்களாவர். அவர்களிடம் எப்பொழுதும் சாந்தமே குடிகொண்டிருக்கும் அப்படியே நமது கனகவல்லியும் பொறுமைக்குறைவிடமாகவும் அன்பின் சுடராகவும் விளங்கினாள்.

ராமநாதனும் கனகவல்லியும் தங்கள் ஜீவியத்தை அதி சந்தோஷமாக நடத்தி வந்தார்கள். இவ்விதமாகவே பல ஆண்டுகள் செல்ல அவர்களின் அன்புக்கும் பங்கம் வந்தது. உலகத்தில் அஃறிணைப் பொருளாகிய மிருகம், பறவை, ஊரும் பிராணி முதலியனவும், மரம், செடி, கொடி முதலிய தாவரவர்க்கங்களும் தமது குணங்களை மாற்றுவது கிடையாது. ஆனால் உயர்திணைப் பொருளாகிய மனுஷனேவெனில் நிலையற்றவனாக தனது மனம்போன போக்கில் நடக்கிறான். அவனுக்கு நன்மை தீமையின் லட்சணங்களைக் கிரகிக்கக் கூடிய தன்மை யிருந்தும் மிருகங்களிலும் கேவலமாய்த் தன்வாழ்நாட்களைக் களித்து கடைசியில் நித்திய நரகத்துக் குள்ளாகின்றான். உலகில் பணமுள்ளவர்களுக்கு அதிக சிநேகிதர்களிருப்பதையும் ஏழைகள் எல்லோராலும் கைவிடப் படுவதையும் நாம் காணலாம். அதேபோல் ராமநாதனும் அந்த ஊரிலிருக்கும் மற்றக் குடியானவர்களிலும் பார்க்க எல்லா விஷயங்களிலும் உயர்வுள்ளவனாகத் தோன்றினான். அதற்கு நமது கனகவல்லியே காரணம்.

ராமநாதனின் வீட்டிற்கு அவனது கூட்டாளிகள், அடிக்கடிவருவதும், இவனும் அவர்களுடன் கூடிச்செல்வதும், எல்லோருமாகக் கடைவீதிக்குச் சென்று உலாவுவதும் இந்தவிதமாகவே தங்கள் காலத்தைக் களிப்பார்கள். நாலு ஐந்து சிநேகர்கள் ஒருமித்துக் கூடினால் அவர்களில் ஒருவனாகிலும் கெட்டவனாகவே யிருப்பின் அப்படிப்பட்டவன் மற்றவர்களையும் தனது நடவடிக்கத்திலும் ஏமாற்றப் பார்ப்பான். ராமநாதனின் சிநேகர்களில் கந்தப்பன் என்ற ஒருவனிருந்தான். அவன் மகா குடிகேடனும் எவ்விதத் தீமைக்கும் அஞ்சாத பாபியுமாக இருந்தான். அவன் ராமநாதனிடம் உள்ள பொருளை அபகரிக்க எண்ணி எப்பொழுது சமயம் வாய்க்குமென்று ஆவலோடு காத்திருந்தான். ஓர் நாள் ராமநாதனும் அவனது சிநேகர்களும் பொழுது போக்குக்காக ஓர் இடத்தில் உட்கார்ந்து வேடிக்கையாக சம்பாஷித்துக்கொண்டிருக்கும் நேரம் கந்தப்பன் அவர்களை நோக்கி "நாம் ஏன் இப்படி உட்கார்ந்து கொண்டு வீணாக நேரத்தைக் களிக்கவேண்டும். வாருங்கள் நாம் சேர்ந்து சீட்டாடுவோம் என்றான். எல்லோரும் அதற்குடன் பட்டார்கள். அன்றைப்பொழுது சீட்டாட்டத்தில் அவர்களுக்குச் சந்தோஷகரமாகவே முடிந்தது. இனிமேல் ஒவ்வொரு நாளும் முறையே ஒவ்வொருவர் வீட்டிலும் விளையாடுகிறதற்கு ஏற்பாடும் செய்து கொண்டார்கள். இந்த விஷயங்களைப்பற்றி கனகவல்லிக்கு ஒன்றும் தெரியாது. ஏனெனில் ராமநாதன் மனைவிக்குப் பயந்து, தனது வீட்டில் விளையாடுகிறதற்கு இடம் கொடுக்கவில்லை.

மனுஷியானவன் சில விஷயங்களில் மனைவிக்குப் பயந்து நடப்பதும் புருஷன் சில விஷயங்களில் மனைவிக்குப் பயந்துநடப்பதும் உலகில் இயல்பே. அதேபோல் ராமநாதனும், தானும் தனது சிநேகர்களும் சீட்டாடுவதில் நேரத்தைக் களிப்பதையும் தனது மனைவிக்குச் சொல்லப் பயந்தான். "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்றபடி பின்னால் வரப்போகிற கேட்டை ராமநாதனால் யூகித்து அதினின்று தப்ப அவனது மூளைச்சக்தி யற்றதாய் விட்டது. மாதங்கள் பல சென்றன. இவர்களின் சீட்டாட்டம் கந்தப்பனின் முயற்சியால் பணம் வைத்து ஆடுகிற சூதாட்டத்தில் முடிந்தது. கந்தப்பனே வெனில் சூதாட்டத்தில் மிகவும் தேறினவனாக இருந்தான். அவனுக்கே அனைவாசிக்குமேல் ஒவ்வொரு நாளும் வெற்றிகிடைத்து வந்தது. ராமநாதன் தனது தாய் தந்தையர் தேடிவைத்த பொருளைச் சிறிது சிறிதாக விரையம் செய்யத் தொடங்கினான். தனது மனைவி அறியாவண்ணம் அவன் கடன் படவும் பின்வாங்கவில்லை. எத்தனை நாளைக்குத்தான் தனது மனைவிக்கு மறைக்க முடியும். இவன் கடன்பட்டதும் சூதாட்டத்தினால் உள்ள பணம் எல்லாம் தோற்றதும் கனகவல்லியின் காதுக்கு எட்டிவிட்டது. ஏழைப்பெண் என்ன செய்வாள் பரிதாபம்! கடன்காரரின் தொல்லை அவளால் சகிக்க முடியவில்லை. தனது கணவனுக்கு வேண்டிய புத்திக

ளும் சொல்லிப்பார்த்தாள். அவளை தனது மனைவியை அற்பமாக எண்ணத் தலைப்பட்டான்.

ஒரு குடியனை எப்படி நல்வழிக்குத் திருப்புவது கஷ்டமோ அதேபோல் சூதாட்டமெனும் அரக்கனுக்கு அடிமையானவர்களைத் திருப்புவதும் கஷ்டமே. கனகவல்லியோ தனதுகணவனுக்கு வேண்டிய நல்அறிவைக் கொடுக்குமாறு கடவுளை நோக்கிப் பிரார்த்தித்த வண்ணமாகவே யிருப்பாள். கடன் காரரின் தொல்லையால் அவர்களுக்கு உண்டான நிலமும் விலைப்படலாயிற்று. தனது அருமை மனைவியின் ஆபரணங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்திட்டான் ராமநாதன்.

கடைசியில் அவன் கையில பணமில்லாததைக் கண்டு அவன் சிநேகிதரும் ஒருவர்பின்னொருவராக பின் வாங்கிவிட்டார்கள். இவனைக்கண்டாலும் கூட அவர்கள் ஏறெடுத்துப்பார்ப்பதேகிடையாது. ராமநாதனின் நாளாந்த சீவியமும் மிகவும் தரித்திர தசையைஅடைந்தது. என்ன செய்வான் பரிதாபம். தனது அருமை மனைவியைப் புறக்கணித்து, அவளின் சொற்கேளாமல் தன்சிநேகரை நம்பி மோசம் போனதை எண்ணி எண்ணி ஏங்கினான். நமது பொறுமையுள்ள கனகவல்லியோ வெனில் இவையவற்றையும் கவனித்தாளாயினும், தனது நாயகனுக்கும் தனக்கும் சாப்பாட்டுக்காகிலும் ஏதேனுமொருவழியைக் காட்டவேண்டும் என்று பரம்பொருளைப் பிரார்த்தித்தாள்

"சகோதரர்களே! சற்றுப் பொறுமையுடன் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எவ்வித தீச்செய்கைகளைச் செய்தும், உங்கள் மனைவிமாரைப புறக்கணித்தும், அவர்களை வைதும், அடித்தும் எல்லாவிதமான நிந்தைகளை நீங்கள் செய்தபோதிலும், உங்களுக்கு யாதாகிலும் விக்கினம் நேரிட்டால் தங்களது உயிரையும் மதியாமல் தங்களது வாழ்நாட்களை உங்களுக்கே அர்ப்பணம் செய்யும் ஏழைச்சகோதரிகளின் பொறுமையான தெய்வீககுணம் எம்மட்டு என்பதை நீங்களை ஆராய்ந்து அறியுங்கள்.

கனகவல்லி தனது நாயகன் தனக்குச் செய்த துரோகத்தைமறந்தவளாக, கண்ணீர்சொரிய, ஆ! ஜெகதீசா நான் என்செய்வேன். எனக்கு இந்த நிலைபரம் வருமென்று கனவிலும் கருதவில்லையே. என் நாதர் எனக்குச் செவி சாய்க்காமல் கெட்ட சிநேகிதரின் வார்த்தையை நம்பினபடியால்தான் இந்தக் கஷ்டத்துக்குள்ளானேன். "ஐயோ சூதாட்டமே, ஒற்றுமையாக வாழும் குடிகளைக் கலைக்கின்ற பேயே! எத்தனை குடும்பங்கள் உன்னால் நாசமாயின. என்னைப்போல் எத்தனை ஏழைப்பெண்கள் கண்ணீருடன் தம் குழந்தைகளைக் காப்பாற்றச் சக்தியற்று பருதவிக்கின்றார்கள். அதுமாத்திரமா எவ்வளவு வறுமையை அனுபவித்தாலும் கடன் பட்டாகிலும் எத்தனையோபேர்கள் உன்னையே தஞ்சம் அடைகின்றார்கள். என்னை! உன்னைய வஞ்சகச்செயல், எப்போதான் உனக்கு அழிவுவருமோ?" "ஏ" கருணைநிதியே, தீனதயாளு இனிமேலாகிலும் இந்தச் சூதாட்டமென்னும் பேயை அறவே ஒழித்து ஒவ்வொரு குடும்பமும் உம்மையே நினைந்து ஒற்றுமையாகவாழ நீரே கிருபை புரியவேணும் என் அப்பனே" என்று எண்ணமிட்டவளாக மனமுடைந்து போய் ஓர்மூலையில் உட்கார்ந்துவிட்டாள். பார்த்தான் ராமநாதன், தனது மனைவியின் முகம் வாட்டமுற்றிருப்பதையும் கண்ணீர் அருவிபோல் ஓடுவதையும் அவனால் கண்டு சகிக்க முடியவில்லை. மெதுவாக அவளிடம் அணுகி "கண்ணே கனகம் என்னால் அல்லவா நீ இக்கெதிக்குள்ளானாய், தாமரை மலர்போன்ற உன் வதனம் வாட்டமுற்றிருப்பதைக் கண்டு என் மனம் படும்பாட்டை ஈசனே அறிவார். நான் தெரியாமல் செய்த பிழையை எனக்கு மன்னிப்பாயா?" என்று ஒரு சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழலானான், இதைப் பார்த்த கனகவல்லியின் மனம் என்ன பாடுபட்டிருக்குமென்று வாசகர்களே யூகித்துக் கொள்ளலாம்.

தனது கணவன் மனங்கசிந்து அழுவதைக் கண்டு அவளால் சகிக்கமுடியவில்லை. "நாதா, சென்ற விஷயங்களைபிட்டு நாம் கவலைப்படுவதில் என்ன பிரயோசனம். இம்மட்டுடன் உங்களுக்குப் புத்தி வந்ததேபோதும். இனிமேலாகுதல் புத்தியுடன் நடவுங்கள். உலகத்தில் யாவருக்கும் இன்பமும் துன்பமும் வருவது இயற்கையே. இனிமேல் நாம் ஒற்றுமையாகக் குடும்பத்தை நடத்துவோம். எனக்குத் தையல்தைக்கவும் பின்னல் வேலை செய்யவும் தெரியும் நான் தினம் தைக்கிற தையல்களை நீங்கள் கடைவீதிக்கு எடுத்துச் சென்றுவிற்று வாருங்கள். அத்துடன் ஏதாகிலும் தின்பண்டங்களும் செய்துதருகிறேன். இதன் மூலமாக வரும் பணத்தைக் கொண்டு நாம் சந்தோஷமாகக் காலங் களிக்கலாம்" என்றாள்.

தனது மனைவியின் பொறுமையான குணத்தையும் அவளின் புத்திசாதுரியத்தையும் வியந்தவனாக, அவளைநோக்கி, "என்பிரிய கனகா; உன் உத்தம குணத்திற்கு மெச்சினேன். உன்னை அடையப் பெற்றநானே பாக்கியவான். ஒவ்வொருகுடும்ப ஸ்திரீகளும் உன்னைப்போல் பொறுமையுடையவர்களாகவும் கடவுள்பக்தி யுடனும் இருந்தால் எவ்வளவு மேன்மையாக இருக்கும். உனது கடவுள் பக்தியே என்னைப் புனிதனாக்கிற்று." என்று சொல்லி அளவுகடந்த அன்பினால் தான் இன்னது

செய்வது என்று அறியாமல் தனது மனைவியை நம்ஸ்கரித்தான். அவள் சட்டென்று அவனைப் பிடித்துக்கொண்டு, "நாதா! இதென்ன வேடிக்கை தாங்களும் இப்படிச் செய்யலாகுமா? தன்பம் இல்லாவிடில் நாம் கடவுளை நினைப்பது கஷ்டமல்லவா?" என்று அவனுக்குத் தேறுதல்கூறி அவனை மகிழ்வித்தாள்.

இனித் துஷ்டனுகிய கந்தப்பனைக் கவனிப்போம் ஓர்நாள் இரவு அடுத்த கிராமத்திலுள்ள தன் சிநேகனொருவனைக்காண எண்ணி தனித்தவனுகச் சென்று கொண்டிருந்தான். தான் இதுவரை காலமும் செய்ததீய்ச் செயல்களுக்குத் தக்கதாக ஆண்டவன் தன்னைத் தண்டிக்கப்போகிறார் என்பது அவனுக்குத் தெரிய வில்லை. துஷ்டஜெந்துக்கள் இராக்காலங்களில் தான் இரைதேடப்புறப் படுகிற தென்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். அதேபோல ஓர் நாகபாம்பு இரைதேடப் புறப்பட்டு வந்து நடுத்தெருவில் மண்ணைத் தின்று கொண்டிருந்தது. கந்தப்பனும் தனக்கு அன்று என்னவேட்டை அகப்படப் போகிறதோ என்று எண்ணமிட்டவனுகச் சென்று கொண்டிருந்தான். ஆனால் தன்னை வேட்டையாட வழியில் ஓர் சர்பமும் இருப்பதாக அவன் எண்ணவில்லை. குடிமயக்கத்தில் சென்று கொண்டிருந்தவன் வழியில் மரஞ்செடி அடர்த்தியாக இருந்ததாலும் நல்ல அமாவாசை இருட்டானதாலும் வழியில் இருந்த பாம்பை ஓர்தடி எனஎண்ணிக் காலால் எட்டி யுதைத்தான். பாம்பும் தனது வல்லமையை அவனுக்குக் காட்டிற்று அடுத்தவினடி அவனது சரீரம் பூமியில் சாய்ந்தது இதுவே அத்துஷ்டனின்முடிவு.

கனகவல்லி தனது நாயகன் அறியாவண்ணம் கொஞ்சபணம் சம்பாதித்து வைத்திருந்தாள். அந்தப்பணத்தைக் கொண்டு அவர்களின் முன் ஏற்பாட்டின் படியே தங்களது சீவியத்தைச் சந்தோஷமாகக் களித்தார்கள்.

ஸரோஜா

சரஸ்வதி அல்லது லக்ஷ்மிகடாக்ஷம் உயர்வை அடையலாம்.

(முற்றுடர்)

கொழும்பிலே கனகபாலசிங்கத்திற்கு எராள மான சிநேகிதர்கள் உண்டாகி விட்டார்கள். ஓர் மார்வாடியும் சினேகமானன். வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்குவதுதான் அவன் தொழில். அவன் முன், யாழ்ப்பாணத்திலும் சிலகாலம் வசித்தவன். ஜெகஜோஜமாணிக்க மணியமும் சிறிது பழக்கமுடையவர், மார்வாடி யாழ்ப்பாணத்திலிருந்த காலத்து பாலு அவனிடம் கொடுக்கல் வாங்கல் செய்ததுண்டு. அதன் பட்டுக, பாலுவுக்குக் கடன் கொடுத்தால் ஒட்டிக்கு இரட்டியாக வட்டி போட்டுப் பணம் அறவிடலாம் என்ற துணிபு மார்வாடிக்கு உண்டு. பாலுவுக்கு தகப்பன் அனுப்பும் ரூ 100 அவனுடைய செலவுகளுக்குப் போதுமானதாக வில்லை. அதனால் அவன் இடை இடை பண உதவிக்கு மார்வாடியை அணுகவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. மார்வாடியும், பாலு கேட்கும் போதெல்லாம் சிறிது சிறிதாகப் பணம் கொடுத்துதவிக் கொண்டு வந்தான். பாலு துஷ்ட சிநேகிதர்களுடன் கூடிக் குடித்து வெறிக்கலானன். சில சமயங்களில் மார்வாடியும் இவர்களுடன் சேர்வதுண்டு. ஆனால் அவன் ஒன்றிற்கும் மிதமிஞ்சிப் போக மாட்டான். தன் காரியத்தில் எப்பொழுதும் கவனமாகவே யிருப்பான். ஓர்நாள் பாலுவும், மார்வாடியும் இன்னும் பல சிநேகிதர்களுமாக ஓர் சாப்பாட்டு விடுதியில் (ஹோட்டலில்) கூடித் தலை கால் தெரியாது மிதமிஞ்சி மதுபானம் செய்துகொண்டிருந்தார்கள். அத்தருணம் அவ்விடுதிப் பரிசாகரனுக்கும் பாலுவுக்கும் சிறிது சச்சரவு ஏற்பட்டுப் பெரிய சண்டையில் வந்து முடிந்துவிட்டது. பாலு குடி பயக்கத்தில் தனக்கு முன்னிருந்த மேஜையைத் தள்ளிப் பிரட்டிவிட்டு எழுந்து பரிசாகரப் பையனுக்கு அடித்துப் போட்டான். மேஜை மேலிருந்த கண்ணுடிப் பாத்திரங்கள், சோடாப் புட்டிகள், சாராயப் புட்டி சகலதும் உடைந்துபோய் விட்டது. இச்சச் சரவைக் கேட்டு விடுதி முதலாளியும் அவ்விடம் ஓடி வந்தான். குடிகாரரெல்லோருமாக எழுந்து ஞாயம் பேசத் தொடங்கிவிட்டார்கள். ஒருவர் சொல்வதை ஒருவர் விடாது எல்லோருமாகச்

சத்தம் போடத் தொடங்கிவிட்டார்கள். "நீங்கள் மரியாதையில்லாது எல்லோரும் இப்படிச் சத்தம் போட்டுச் சச்சரவு செய்தால், நான் பொலீசை வரவழைத்து உங்களெல்லோரையும் ஒப்படைத்து விடுவேன்";...என்று கூறி முடிப்பதற்குள்ளே, "போய் வரவழையடா, ஒருகை பார்க்கலாம்" என்றுக் கூறிக் கொண்டே முதலாளியினுடைய கன்னத்தில் ஓர் அறை அறைந்தான் பக்கத்தில் நின்ற பாலு. உடனே, மேற்கொண்டு ஒன்றும் பேசாது ஓடோடியும் வெளியே சென்று சிறிது நேரத்தில் ஓர் பொலிஸ் பரிசோதகருடனும், நான்கு ஜெவான்களுடனும் திரும்பி வந்தான் முதலாளி.

பொலிஸ் பரிசோதகர் பாலுவை யணுகி, "என்ன குடித்துவிட்டுச் சண்டை போடுவது" என்று அதிகாரத் தொனியோடு விளவினன். "கிளியறவுட்" (clear out) என்று பாலு பதிலுத்தாரமாகக் கூறவே, அவன் விலாவில். பக்கத்தில் நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தனொருவன் ஓர் குத்துக் குத்தினன். உடனே பாலு, வயிற்றையும் விலாவையும் இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு கீழே சாய்ந்துவிட்டான். இதைக் கண்டதும், அங்கிருந்த மற்றவர்களுடைய வெறியும் அட்டகாசமும் எங்கோ ஓடி மறைந்துவிட்டது. திடீரென்று மார்வாடி எழுந்து பாலுவைத் தூக்கி உட்கார வைத்து, "இது நீ மரியாதை தப்பி நடந்ததுக்கு வந்த வினை" என்று அவனைக் கடிந்துவிட்டு, பொலிஸ் பரிசோதகரை அணுகி, "ஐயா! தயைசெய்து மன்னிக்கணும். இவர் ஒரு பெரிய இடத்து பிள்ளை. இவருடைய தகப்பன் யாழ்ப்பாணத்திலே ஒரு மணியகாரனு," என்று கூறி வேண்டி நிற்க, விடுதி முதலாளி அவனை மேற்கொண்டு ஒன்றும் பேச விடாது, ஒரு வகையான சமாதானத்திற்கும் வரமை கண்டு, மார்வாடி, பரிசோதகரையும் முதலாளியையும் தனிமையாக அழைத்துக் கொண்டு கீழே சென்று அரைமணி நேரத்தின் பின் மார்வாடி மேலே வந்து, பாலுவையும் ஜெவான்களையும் அழைத்துப் போய் முதலாளியும் பரிசோதகரும் உட்கார்ந்திருந்த அறையில் விட்டான். பொலிஸ் பரிசோதகர் ஜெவான்களை, அவரவர்கள் ஸ்தானத்திற்குப் போகும்படி கட்டளையிட்டுவிட்டு பாலுவைத் தனக்கருகில் ஓர் நாற்காலியில் அமரும்படி செய்தார். மார்வாடியும் ஜெவான்களை வெளியே போக விட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு ஓர் நாற்காலியில் வந்தமர்ந்தான். பொலிஸ் பரிசோதகர் பாலுவை நோக்கி, "உன்னுடைய பெயர் என்ன" என்று விளவினன். "பாலு" என்று பதிலுரைத்தான் எங்கள் கன்கபாலசிங்கம். "பாலு! உன்னுடைய குலம் கோத்திரம், உன் தகப்பனுருடைய பெருமை, மகிமை, உன்னுடைய நடைகளின் சிறுமை, எழிமை சகலதும் இந்த மார்வாடி ஐயா எடுத்துச் சொன்னர். அதனலே எனக்கு உன்மேல் இரக்கமுண்டாயிற்று. உனது குணத்திற்கும் போக்கிரித்தனத்திற்கும், உன்னை இப்போ விலங்கு பூட்டிப் பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போவதுதான் நீதி. ஆனல் நீ கோட்டிற்குப் போய் மரியாதை யீனப்பட்டு, பார்ப்போர் சிரித்து ஏளனம் செய்யும் நிலைமைக்கு வந்தால் அது உனக்கல்ல, உன்னுடைய தாய் தகப்பனுருக்குத்தான் அவமானம். அப்படி வரவிட எனக்கு இஷ்டமில்லை. உன்னை ஓர் இட்டலிடஞ் சல்களுக்கும் உள்படாமல் சுகமாக ஊருக்குத் திருப்பி யனுப்பிவிட வேண்டுமென்பதே என்னுடைய அவா. இருந்தும், நீ இந்தமுதலாளியாருக்கு அடித்துப் போட்டாய். நீ பலபேருக்கும் முன்பாக அவரை அவ்வளவு அவமானத்திற்குள்ளாக்கியது அவரால் சகிக்க முடியவில்லையாம். அவர் உன்னை இலேசில் விடப் போவதில்லை. எல்லாம் அவர் கருணையிற்றன் தங்கியிருக்கிறது. நீ மணியகாரனுடைய மகனு யிருந்தாலென்ன, எந்த ராஜனுடைய மகனுயிருந்தால்தானென்ன; நீ பெரிய குலத்தில் பிறந்தால், அக்குலப் பெரியோருடைய பெருமையையும், உனது மரியாதையையும் காப்பாற்ற நீ ஒழுங்காய் நடந்திருக்கவேண்டும். நீ அது தப்பி நடந்தபடியால், அதற்கு பரிகாரம் தேடத்தானே வேண்டும். ஆனபடியால் அவருக்கு மானநஷ்டமாக அவர் கேட்கும் பணத்தைக் கொடுத்து அவரை மன்னிப்புக் கேட்டுக் கொள். எப்படியோ உனது இஷ்டத்தைச் சீக்கிரம் தெரிவி"—என்று அதிகாரத்தோடு கூறினர் பொலீஸ் பரிசோதகர்,

பாலு பார்த்தான் ஒரு வழியுமில்லை. பரிசோதகர் எப்படிக் கூறுகிறரோ அப்படியே செய்வதுதான் உசிதமென்று நினைத்து, "நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படியே செய்கிறேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நீங்களே எனக்குப் பேசும் தெய்வமாக இருக்கிறீர்கள்" என்று மன்றுடினன். "என்னை அவமானப்படுத்தியதற்கு நஷ்ட ஈடாக ரூபா 3,000 கொடுத்தால் சமாதானமாகலாம். அதில் ஒரு செம்புச் சல்லி குறைந்தாலும் முடியாது. ஆனதினல் நேரத்தை வீணுய்க் கடத்தாமல் ஒரு முடிவுக்கு வர வேண்டியதுதான் தீர்மானம்"—என்று மூர்க்கமாய்க் கூறிச் செருமினன் ஹோட்டல் முதலாளி. இதைக் கேட்கவே பாலுவுக்கு ஒரே கலக்கமாய்விட்டது. தலை சுழல ஆரம்பித்துவிட்டது. செய்வதின்னதெனத் தோன்றுது திகைக்கலானன். எதுவோ நூறு இருநூறு வரையிற் கேட்பான், கொடுத்து சரிக்கட்டி விடலாமென்று

முதலில் நினைத்தான். ஆனால் ரூபா 3,000 என்ற தொகை காதில் விழுந்தது தானே, அவனைத் தூக்கி வாரிப்போட்டது போலாயிற்று. எண்ணுத எண்ணமெலாம் எண்ணி யெண்ணிக் கண் கலங்கியபடியே அங்கும் இங்கும் பார்த்துப் பறக்கப்பறக்க முழிக்கிறான். "என்னடா பறக்கப்பறக்க முழிக்கிறாய், உன்னுடைய ஜெக ஜாலப் புரட்டு இந்திர ஜால புரட்டுகளில் இதுகு மொரு உருட்டுப் புரட்டா? எச்சரிக்கையாயிரு. எங்களை யெல்லாம் ஏமாற்றி விடலாமென்று நினையாதே உன்னுடைய முடிவைச் சீக்கிரம் சொல்லு அல்லது நாங்கள் எங்கள் காரியத்தை நடத்தத் தொடங்குவதா என்று பல்லை நெருமிக் கொண்டு பாலுவை அதட்டினார் பொலீஸ் பரீசோதகர்.

பாவம், பாலு குன்றிப் போனான், மிகவும் தீன குரலில், "ஐயா! உங்கள் காலடியே எனக்குச் கெதி. நான் என்ன செய்வேன். எனக்கு இந்த ஊரில் இவ்வளவு தொகைப் பணம் உதவக் கூடியவர்கள் ஒருவருமில்லை. நான் எனது தகப பனுருக்கு கடிதம் எழுதி பணம் வரவழைத்துத் தான் தரவேண்டும். இதைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தேன்," என்று கூறினான். "ஏன், உனக்கு எங்கள் மார்வாடி ஐயாவைத் தெரியும்தானே! அவருடன் யோசித்து ஏதும் ஒழுங்குபடுத்துவதுதான் உசிதம்," என்று பரீசோதகர் கூறவே, "பாலு ஐயாவுக்கு உதவி செய்யக் கூடியவர்கள் என்னைவிட இங்கே வேறு யாரும் இடையாது ஸார்! இவரையும், இவருடைய அப்பா மணியகார ஐயாவையும் யெனக்கு நெம்ப காலமாக தெரியும். இவரை ஒரு கஷ்டத்துள் ளும் விடாம பார்க்கணும் அது நம்மள் கடமை. ஆனு, இப்போ சல்லிக்கு யெங்கு போறது," என்று மார்வாடி கூறிச் சிறிது நேரம் எதுவோ யோசிக்குமாற் போலிருந்து விட்டு, "ஸரி! நீங்க ளெல்லாம் ஸற்று அரை மணி நேரம் இங்கு உட் கார்ந்து கொள்ளுங்க ஸார். நம்ப லிநேகிதன் ஒருவன் இருக்கிறானு. அவனைப் போய்ப் பார்த்துட்டு வந்துர்றே. அப்புறம் வேண்டிய எல்லா இங்கு செய்கிறேனு," என்று கூறி விடை பெற்றுக் கொண்டு சென்று அரை மணிநேரம் பொறுத்து வந்தான் ஸார்! பணம் பெயர்க்கலாம். அவனு நெம்ப பிரமாதமாக என்ன என்னமோ எல்லாம் சொல்றான். ரூபா 5,000 பெற்றுக் கொண்ணதாக பாண்டு எழுதிக் கொடுத்தாக்கா ரூபா 3,000 தர்றமென்னுறான். நாலு சாட்சியளு கையெழுத்து போடணுமென்றான். நாலு எங்கெங்கலா ஓடி திரிந்து பார்த்தே ஓர்டமும் கட்டுப்படல்ல. இவ்வளவு பணம் யார் கையிலே வைத்திருப்பா. முதலாளி ஐயா நெண்டு நாளு பொருத்தாக்கா யேதும் ஒழுங்கு படுத்தலாங்க" என்று கூறி முதலாளியை நோக்கினான் மார்வாடி.

"இன்ஸ்பெக்டறவாள்! இதென்ன தொந்தரவு, இந்தப் போக்கிரியை அறெஸ்ட் செய்யுங்கள்" என்று சீறினான்முதலாளி. அத்தருணம் மார்வாடி பாலுவை ஓரப்பக்கம்அழைத்துப்போய் மெதுவாக, "யென்னமோ கை யெழுத்தைப் போட்டு பணத்தை வாங்கிக் கொடுத்து தொலைத்திடுங்க. இது பிற ஊரு. ஆக்களா என்னு பெரிய புலியள். கதையை வளத்தா அவங்க மரியாதை யில்லாம பேசுவாங்க. வாங்க போவலா" என்று திரும்பி வந்து தங்கள் தங்களாசனங்களில் அமர்ந்தார்கள். "ஐயா! நீங்க கோவிக்க வேண்டா. பாலு ஐயா உங்க இஷ்டப்படி எல்லா ஒளுங்குபடுத்திவருரு. நானு கொஞ்ச நேரமலே பணமு ஆளு கொண்டிட்டு வர்றே"—என்று கூறி விட்டு வெளியே சென்று பத்து நிமிஷ நேரத்திற்குள் திரும்ப ஓர் செட்டியையும் அழைத்துப் கொண்டு அங்கே வந்து சேர்ந்தான். உடனே எல்லோரும் கலந்து பேசி, பாலு செட்டியிடம் ரூபா 5,000 பெற்றுக் கொண்டதாகவும் ஒரு வாரத்திற்குள் ஒருமாசவட்டியும் முதலும் சேர்த்து தீர்த்துப் போடுவதாகவும் நோட்டு எழுதி அரசாங்க முத்திரையும் ஒட்டிப் பாலுவிடம் கையொப்பம் வாங்கினார்கள். இதற்குச் சாட்சிகளாக ஹோடல் முதலாளியும் மார்வாடியும் கையொப்பமிட்டார்கள். அப்பொழுது பொலீஸ் பரீசோதகர் பாலுவை நோக்கி, "பாலு! நான் செட்டியாரிடம் பணத்தை வாங்கி இவர்களுக்குக் கொடுத்துச் சரிப்படுத்தி விடுகிறேன். உனது குடிகாரத் தனத்திற்கும், அகங்காரத்திற்கும் போதிய தண்டனை கிடைத்துவிட்டது. இனி நீ உனது தகப்பனுக்கு கடிதமெழுதிப் பணத்தை வரவழைத்து செட்டியாரிடைய கடனைத் தீர்த்துப் போட்டு ஊருக்குப் போய் நல்ல வழியில் நடக்கத் தெண்டி. செட்டியாருடைய கடன் தீரும் வரையும், நீ இப்போ இருக்கும் ஜாகையை விட்டு வெளியே எங்கும் போகக் கூடாது. எல்லாம் ஒழுங்காகும் வரைக்கும் நானு பக்கங்களிலும் உன் மேல் எத்தனையோ பேர்கள் கண் நோக்கமாகமே யிருப்பார்கள். இதை நீ மறக்கக் கூடாது. நீ மற்றவர்களை ஏமாற்ற யோசிப்பாயானால் நீயே இவ்வும் கஷ்டத்திற் குள்ளாக வேண்டி வரும் ஏனபது உனது ஞாபகத்திலிருக்கட்டும். ஜாக்கிரதை" என்று கூறி அவனை வெளியே போகும்படி கட்டளையிட்டான். "ஸார்! நானும் போய் வர்றே" என்று மார்வாடியும் விடை பெற்றுக் கொண்டு பாலுவையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

இச்சம்பவம் நடந்த மறுநாட்தான் கனகபால சிங்கம் தகப்பனுக்குக் கடிதம் எழுதியது. ஜெக ருஜ மாணிக்க மணியமும் கொழுமபு நகர் சேர்ந்து மகனுடைய ஜாகைக்கேகி விஷயங்களை நோக்கினர். எல்லாம் சிக்கலாகவே யிருந்தது. ரூபா 5,000! இப்பெருந் தொகையை, சாதாரண மனுஷர்களால் நினைக்கவும் முடியாத கொகை, ஒரு அர்த்தமுமில்லாது சும்மா விட்டெறிவதென்றால் எந்தக் குபேரனுக விருந்தாலும் எப்படி மனம் பொறுபபான். மணியகாரனுக்கு இப்படியாகத் தனது மகனை ஏமாற்றியதற்கு எல்லோரையும் நீதி ஸ்தலத்திற்கு இழுத்து ஒரு கை பார்க்கலாமென்றால், தனது காரியங்களெல்லாம் வெளியாகி விடுமே யென்று ஓர் பக்கம் ஏக்கமாயிருக்கிறது. இப்படியான போக்கிரிகளைச் சும்மா விட்டுவிடுவதோடு நில்லாது பணமும் ரூபா 5,000 எண்ணிவிட வேண்டுமே யென்று இன்னோர் பக்கம் ஆத்திரமாக விருக்கிறது.

பின்னால் ஆறி யமர்ந்து விஷயங்களெல்லாவற்றையும் மணியகாரன் சீர்தூக்கிப் பார்த்தார். ரூபா 5,000-த்தைப் பார்த்தால் தான். அடிகோலியவைகளெல்லாம் கெட்டு விடும் ஊரிலெல்லாம் ஒன்றிற்கு நாலாகக் கதை கிளம்பி விடும். என்றுமழியா அவமானமும் வசையும் வந்து சம்பவிக்கும். பின் தனது மகனுக்கு ஊரிலொருவரும் பெண் கொடார்கள். தன்னுடைய பெருமையோடும், தனது மகனுடைய மரியாதை, சீவியச் சிறப்புகள் முதலானவைகளுடனும் இந்த ஐயாயிரம் ரூபாவை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்பணம் கால் தூசுக்குச் சமானம் என்பதாகத் தீர்மானித்தார். எது எவ்வகைபாக வரினு, இந்த ஐயாயிரத்தைப் போல் எத்தனை ஐபாயிரங்கள் செலவழிந்தாலென்ன, எங்கள் மரியாதை யொன்றை மாத்திரம் காப்பாற்றிக் கொண்டு அம்பிகை பாகர் வீட்டிற் புகுந்திட வேண்டும்.

சகலதும் மங்களகரமாக முடிந்தபின், ஏது எவ் வாறுயினும் காரியமிலை. பூனையின் வாயில் அகப் பட்டஎலி தப்புமா. அம்பிகை பாகர் வீட்டுச் சம் மந்தத்தைத் தவற ஒருபோதும் விட்டுவிடக் கூடாது. ஆகையால் இரண்டாம் பேரும் அறியாது பணத்தைக் கொடுத்துச் சகலத்தையும் தீர்த்துக் கொண்டு காலதாமதம் செய்யாது ஊருக்குப்போய் விடுவதே மேலென ஓர் முடிவிற்கு வந்தார்.

பின்பு, பணத்தைக் கொடுத்து நோட்டைப் பெற்றுத் கிழித்தெறிந்துவிட்டு; மார்வாடியிடம் சில்லறைக் கடன்களுமிருந்தது. அவைகளையு மெல்லாந் தீர்த்துவிட்டு, அடுத்தநாட் காலை மெயிலில் மணியகாரன் மகனையுமழைத்துக் கொண்டு புறப்பட்டு ஒருவருக்குந் தெரியாதபடி வீடு கொணர்ந்து சேர்த்தார். வீட்டிலும் அவனுக்கென ஓர் அறை பிரத்தியேகமாக ஏற்படுத்தி, எங்கும் தலை காட்டாது அந்த அறையிலேயிருக்கும்படி ஏற்பாடாயிற்று.

இதற்கு மூன்றும் நாள் மாலை ஐந்து மணி சமயமிருக்கும், அம்பிகைபாகர் தனது வீட்டு வெளி விறாந்தையிலுட்கார்ந்திருக்கிறார். அவர் பாரியாள், ஓர் வெள்ளித் தட்டில் சில சிற்றுண்டி வகைகளும் ஓர் கிண்ணத்தில் காப்பியும் கொணர்ந்து அவருக்கு முன்பாக இருந்த மேஜை மீதிலே வைத்தாள். அத்தருணம் அவர்கள் வீட்டுத் தெரு வாசலில் ஓர் மோட்டார் ரதம் வந்து நின்றது. அதில் வந்த பிரபு எங்கள் ஜெகரூகமாணிக்க மணியகாரன்தான். அம்பிகைபாகர் மணியகாரனைக் கண்டதும் என்றுமில்லா மனக்களிப்போடும் வாஞ்சையோடும் உபசரித்தார். அவர் பாரியாள், "அண்ணை வாருங்கள்," என்று தேன் மாரி பொழியும்படியான அவ்வளவு அன்போடு உபசரித்து ஆசனமிட்டாள்.

[தொடரும்]

நீங்கள் அறிவீர்களா?

கோடித்து கோடித்து வறுமை கோடித்து.

யுவதியின் பரிதாப மரணம்!

தெகிவளையைச் சேர்ந்த பொத்தேயு வீதியில் ஒரு மருத்துவப்பெண் சீவித்து வருகிறாள். அவளுக்கு இருகுமாரத்திகள் இருந்தனர். இவர்களின் தகப்பனார் 3 வருடங்களுக்குமுன் இவர்களை விட்டுப் பிரிந்து போய்விட்டார். இதுவரை தாயார் தனது மருத்துவத்தொழிலால் கிடைக்கும் பொருளைக்கொண்டு இவர்களைப் போஷித்து வந்தார்.

சென்ற மூன்று மாதங்களாய் குடும்பச்செலவைக் கட்டக்கூடிய வருமானம் கிடைக்கவில்லை. ஆகவே குடும்பத்தை நடத்துவது பெரிய கஷ்டமாகத் தோன்றியது. இதை நன்கு உணர்ந்த 17 வயதுசென்ற இளையமகளாகிய எக்னிஸ்பெரேரா தற்கொலை செய்ய உத்தேசித்துக்கொண்டாள்.

சென்றமாதம் 17 திகதி தனதுகொலைக்குத்தானே பொறுப்பாளியென . ஒரு கடிதத்தை எழுதி வைத்தாள். தாய் மருத்துவத் தொழிலுக்காக வைத்திருந்த விஷமருந்தை 3 குளிசைகளை உட் கொண்டாள். விஷயம் தாய்க்குத் தெரியவந்த தும் மகளை வெள்ளவத்தைப் பொலிஸ் நிலயத் திற்குக்கொண்டு சென்று அங்கு தம் வாக்கு மூலத்தைக் கொடுத்தபின் இறந்தவள் கொழும்பு அரசினர் வைத்தியசாலைக் கனுப்பப்பட்டாள். அங்கு சிகிச்சை செய்யப்பட்டும் குணமடையாது ஒரு வாரத்தின்பின் இறந்து விட்டாள். மரண விசாரணையில் தற்கொலையெனத் தீர்ப்புக்கூறப் பட்டது.

* * * *

மின்சார யமன்

———:o:———

வேலையாள் பலியிடப்பட்டான்

வெல்லம்பிட்டியாவிலுள்ள சுகாதாரப் பரி சோதகர் திரு. ஜெ. டி. வில்வாவின் வீட்டில் அவருடைய காரில் ஒருவர் பழுதுபார்த்துக் கொண்டு இருந்தார். அவ்வமயம் வெளிச்சம் தேவைப்பட்டபடியால் வீட்டில் வேலையாளாயி ருந்த 25 வயது சென்ற பீற்றர் என்னும் வாலி பன் ஒரு மின்சார விளக்கைப் பிடித்துக்கொண்டு நின்றான். திடீரென விளக்கு வெடித்ததால் மின் சாரம் பீற்றரைத் தாக்கிற்று. உடனே அவன் வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டான். அவன் சென்றதும் இறந்துவிட்டான்.

* * * *

வீட்டில் காணப்பட்ட வாலிபன்.

ஒரு மாதக் கடூழியச் சிறைவாசம்.

தெகிவலையைச் சேர்ந்த சைமன் சிங்கோ என் னும் இளம் வாலிபன் கொள்ளுப்பிட்டியிலுள்ள டக்டர் V. சின்னத்தம்பியின் வீட்டிற்குள் உத்த ரவின்றிப் பிரவேசித்ததாகக் கொழும்புப் பொலி ஸ்கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்டான். நீதிபதி திரு: J. N. ஆலுமூகமவர்கள் அவனுக்கு ஒரு மாதக் கடூழியச் சிறைவாசமும் ஒரு வருடம் பொலிஸ் கண்காணிப்பில் இருக்கவேண்டுமென வும் விதித்தார்.

* * * *

35 வயது சென்ற ஒரு சிங்களமாது சிகிச் சைக்காக கொழும்பிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்றாளாம். அவளைப் பரிசோதித்தபோது அவளின் இருதயம், ஈரல் முதலிய உறுப்புக்கள் வழக்கத்திற்குமாறாக வயிற்றின் வலப்பாகத்தில் காணப்பட்டதாம்.

கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வாசம்.

ஆலஸ்தபால்மூலம் பேச்சு
இந்த நவநாகரீகம் நமக்கேன்

சமீபத்தில் லண்டனில் விவாகரத்து வழக்கு ஒன்று விசாரிக்கப்பட்டது. யோஸப் என்பவரும் அவரது மனைவியும் ஒரேவீட்டில வசித்து வந்த னர். இருந்தபோதிலும் யோஸ்ஸாப்தம் மனை வியைப் பார்ப்பதும் இல்லையாம் பேசுவதும் இல் லையாம். இவ்விதம் பலவாரங்கள்கழிந்தன. ஸ்ரீமதி யோஸ்ஸாப் ஏதோ ஒருமுக்கியமான சங்கதியைத் தம்புருஷனுக்குத் தெரிவிக்கவிரும்பினர். அவ்வி ஷயத்தை ரிஜிஸ்த்தர்தபால் மூலம் தம்புருஷ னுக்குத் தெரிவித்தார். இருவரும் ஒரே வீட்டில் வசிக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்விதம் பலமுறை நடந்ததாம். இதுவே விவாக ரத்துக்கு ஆதிகாரணம்.

* * * *

உலக்கையடியும் கோடரி வெட்டும்.

வேலைக்கார சிறுவனின் பரிதாப மரணம்.

யாழ்ப்பாண சுப்பிறீம் கோட்டில் முத்துச்சாமி என்னும் ஓர் இந்தியனை பழையச்சோர்ந்த 1 சங்க ரன் அப்புக்குட்டி 2 அப்புக்குட்டி பெண்சேது என்பவர்கள் அடித்துக்கொலை செய்ததாக தொட ரப்பட்டவழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப் பட்டது.

டக்ரரின் சாட்சியத்தில் காலகதியடைந்தவன் மேல் 35 காயங்கள் காணப்பட்டதாகக் குறிப்பி டப்பட்டிருக்கிறது.

ஜூரிகள் அரை மணித்தியால ஆலோசனையின் பின் எதிரிகள் இருவரும் கொலைக்குற்றவாளிக ளென அபிப்பிராயம் தெரிவித்தனர்.

முடிவில் நீதியரசர் இரு எதிரிகளுக்கும் மரண தண்டனை விதித்தாரென்று ஈழகேசரி அறிவிக் கிறது.

* * * *

கோலாலம்பூர் அனைதைகளுக்காகவும், வேலை யற்றோரின் குழந்தைகளுக்காகவும் 17ம் திகதி ஸ்திரீகள் செர்விஸ் லீக் கிறிஸ்மஸ் பாட்டி நடை பெற்றபொழுது, ஒரு சீனவிதவை ஸ்திரீதான் உணவு முதலியன வாங்குவதற்காக தனது குழந் தைகளில் இரண்டை சமீபத்தில் விற்றதாக லீக் அங்கத்தினரிடம் கூறினாள்.

இந்தப் பார்டிக்கு 180 குழந்தைகள் வந்திருந்தனர். பிரின்ஸஸ் தியேடரில் இலவசமாக ஒரு சினிமாக்காட்சி காட்டப்பட்ட பின்னர், குழந்தைகளும் பெற்றோர்களும் கிறிஸ்தவ வாலிபர் சங்க மண்டபத்திற்கு இட்டுச்செல்லப்பட்டனர். எல்லோருக்கும் உணவுகளும், பொம்மை முதலியனவும் கொடுக்கப்பட்டன.

பொது ஜனங்கள் அளித்த தாராளமான நன்கொடையினால் இப்பார்ட்டி சிறப்பாக நடத்தப்பட்டது.

கடலில் ஏற்பட்ட சண்டை.

புல்வெட்டும் கத்தியினால் காயம்.

ஆரோக்கியசாமி என்றொரு பி. டபிள்யு. டி. தொழிலாளி 11-ம் திகதி திரு டபிள்யு. தாரேகுட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு கருப்பையா என்பவனுக்கு புல்வெட்டுக் கத்தியால் காயம் உண்டாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டான். கடனைப்பற்றிய சண்டையின் பயனாக இவ்வாறு ஏற்பட்டது எனச் சொல்லப்படுகிறது. வழக்கு ஒரு வாரம் ஒத்திவைக்கப்பட்டு 50 வெள்ளி ஜாமீன் அனுமதிக்கப்பட்டது.

- - கடிதம் - -

கனம் பத்திராதிபர் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

ஐயா,

தங்கள் பத்திரிகையின் 9-வது இதழில் பெண்ணுரிமை எழுதிய சகோதரர் எனக்கு விடுத்த பதிலை வாசித்து இன்னும் சந்தேகமே கொண்டேன். பெற்றோர் தாமே தம்மக்களுக்கு ஏற்ற வரனைத் தேடி மணம் புரிவதால் விளையும் கேடு என்ன? என்ற எனது கேள்வியையும் அதற்குச் சகோதரர் விடுத்த பதிலையும் வாசித்தவர்கள் என்னைப்போலவே சந்தேகமுற்றிருப்பார்களென்பதற்கு ஐயமில்லை. ஏனெனில அதற்கு நேர்முறையான பதிலே இல்லை.

தான் பண்டைக் கால முறையைச் சொல்ல நான் மேல் நாட்டு முறையை அனுசரித்துப் பேசுவதாக அவர் சொல்லுகிறார். உண்மையில் தற்காலத்தில் மேல் நாட்டு நாகரீகமே அதிகம் உலவி வருதலால் நான் அதைக் கருதியதில் குற்றமென்ன? பண்டைக் காலத்தில் சீதை, சாவித்திரி, நளாயினி, தமயந்தி, முதலிய கற்பரசிகள் எப்படித்தான் விவாகம் செய்து கொண்டனர். காந்தனது பேரழகை மட்டுமே விரும்பிச் செய்தனரா? அல்லது குணத்தை நாடிக் கூடித்திரிந்து அதை அறிந்து செய்து கொண்டனரா? அல்லது காந்தர்வ விவாகம் செய்து கொண்டனரா?

சீதையுடன் வில்லொன்று பிறந்து அதற்குரியவனே அவ்வில்லை வளைத்துச் சீதையை மணந்தான். கற்பரசியான சாவித்திரியின் விவாகம் எப்படி நடந்தது? அதுவும் பெற்றோர் பேசிச் செய்ததுதானே. உலகம் போற்றும் உத்தமியாகிய நளாயினியின் திருமணம் எப்படி நடந்தேறியது. அதுவும் பெற்றோர் சம்மதப்படியன்றோ. பெண்ணுக்குச் சோடில்லாத வரனையிருந்தும் பதிவிரதை நளாயினி தன் கற்பின் மகிமையால் யாவற்றையும் சகித்து தினகரனையும் தடுத்து தேவாதி தேவர்களையும் தடுமாற்றவடையச் செய்யவில்லையோ? தற்காலத்திலும் இப்படியே பெண்ணுக்குப் பொருத்தமில்லாத வரன்கள் கிடைப்பது முண்டுதான். முற் பிறப்பை நம்பி வரும் இந்து சமயப் பெண்கள அதெல்லாம் தமது பூர்வ ஜென்ம கர்ம பலனென எண்ணி யாவற்றையும் சகித்து வருவது கண்கூடு அப்பெண்களின் பூர்வ ஜென்ம வைரிகளே மறு ஜென்மத்தில் அவர்களுக்குப் பெற்றோராய்ப் பிறந்து தங்கள் பகையைத் தீர்த்து வைத்து விட்டுப் போகின்றனர். எப்படியும் கர்ம பலன் அனுபவித்தே தீரவேண்டுமென எண்ணிச் சகித்து வரும் பெண்களே மேன்மையடைகின்றனர். ஆனால் இதெல்லாம் கடவுள் ஒருவர் இருக்கிறாரென்றும், அவரவர் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்றபடி அவர் தண்டனை விதிக்கிறாரென்றும் நம்புகிறவர்களுக்குத்தான் அவரவர் செய்யும் பாவ புண்ணியங்களுக்கேற்ற தண்டனை கிடைப்பதற்கு கடவுள் ஒருவர் அவசியமோ என்று கூடச் சிலர் சொல்வதுண்டு. அப்படியானவர்கள் இவ்வுலகில் நமக்கு அலசியமான நியாயஸ்தலங்கள் இருக்கும்போது அரசன் என ஒருவன் நமக்கு அவசியமா என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் விளங்கும்.

"பொறுமையே பெருமையளிக்கும்" என்பதை அறிந்தவர்கள் நம் சகோதரிகளே. தமயந்திக்கு அன்னப்பறவையே தூது சென்று வரன

தேடினதாகவன்றே அறிகிறோம். காந்தர்வ விவாகத்தினால் அவதியுற்ற சகுந்தலாவின் சரித்திரமும் ஈற்றில் ஆகாயவாணி பூமி தேவியின் சாட்சியத்தால் அரசன் சகுந்தலையை ஏற்றுக் கொண்டதும் யாவரும் அறிந்த விஷயம். இப்படி யெல்லாம் அந்தப் பண்டைக் காலத்தில் நடை பெற்றிருக்கின்றது. அப்படி இப்போ நடக்க இயலாத படியால் நாம் தொன்மையை இழந் தோம் என்பதும் உண்மையே. ஆதலால் அத் தற்கடுத்தபடியான பண்டைக் காலத்தைப்போல் பெற்றோர் வரன் தேடுவதே மேன்மையும் அபா யமில்லாததும் பழிப்புக்கிடமில்லாததுமாகும். அஃதின்றி காதலும், காமமும் என்ன என்பதே அறியாத நம் சகோதரிகளுக்கு அதைப் படிப்பிப் பது விபரீதமாகவன்றே முடியும். கலியாண மானபின் தெய்வீக அன்பினால் பிணைக்கப்பட்டு இணைபிரியாது வாழ்ந்து வரும் நம் சகோதரிக ளின் அன்பிற்கும், பக்திக்கும் இணை வேறு உண்டோ?

தற்காலத்தில் நகை புடவை வாங்குவது போல வே பேரம் பேசி ஒரு மண மகனையும் வாங்குவது யாவருமறிந்ததே. ஒருபுடவைக்குக்கடைக்காரன் பத்து வெள்ளி சொல்லுகிறான். என்னிடம் இருப்பது எட்டு வெள்ளியானால் நான் அதைப் பெற்றுக்கொள்ள முடியாது. பத்து வெள்ளி வைத்திருக்கும் இன்னொரு பெண் அதைப் பெ ற்றுக் கொள்ளுகிறாள். அதுபோலவே எண்ணா யிரம் கொடுத்துப பெற்றுக் கொள்ள முடியாத மணமகனைப் பத்தாயிரம் கொடுப்பவர் வாங்கிக் கொள்ளுகிறார். ஆனால் அதிலும் அதிகாரம் வேறே. "அப்படியானால் நம் சகோதரிகளின் பாதுகாப்பிலும், அதிகாரத்திலும் நாமிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக எங்கள் வள மை இருக்கிறது. ஆகையால் அவர் கூற்றுப் பொருந்தாவென்றுற் தப்பில்லை" என்ற அவரது வினாக்கத்தைப் பார்த்த அறிஞர் மிகுந்த வியப் படையாமலிரார்.

எப்படி அதிகாரம் வகித்த போதிலும் வாங்கின பொருளை இல்லை என்று மறுக்கலாமா?

காசு கொடுத்து ஒரு பொருளை வாங்குகிறோம். ஏன் ஒரு மாட்டையே வாங்குகிறோமென வைத் துக்கொள்வோம். அது எல்லா விதத்திலும் நமக்கு அனுகூலமாக இருந்த போதிலும் சில சமயம் நம்மை முட்டவருகிறது. அப்படி வரு வதனால் மட்டும் நாம் அதற்கடிமை யாவோமா? ஆடவரில் சிலர் முரட்டுச்சுபாவம் வாய்ந்தவர்கள். அலலும் பகலும் குடும்பத்துக்காவே கஷ்டப் பட்டபோதிலும் தாங்களே அதிகாரம் வகிக்க வேண்டுமென்ற இறுமாப்புடையவர். பராக்கிரம முடையவர். பெண் தியாகத்திலும் கருணையி லும், சிறந்தவளானதினாலும், உடன் வன்மை குறைந்தவளானதினாலும், அவளை தனது சீதனத் தினால் பெற்றுக்கொள்ளப்பட்டவளாலும் அவ ளையே அதிகாரம் வகிக்க விட்டுவிடுகிறாள். ஆனா லும் ஒரு இல்லத்தில் பெண்ணின் அனுமதி யின்றி கற்றறிந்த கணவன் தன் நினைவுப்படி ஒன்றுமே செய்ய இச்சை கொள்ளான். மற்றவர் எவ்விதமாக நடத்துகிறார் என்பதற்கு முட்ட வரும் மாடே சாட்சி பகரும்.

மேலும் "ஆகையால் நம் சகோதரிகளை எப்பி லும் உரிமையிற் குறைந்தவராகவே நாம் கருதுகி றோமென்று என்கட்டுரையில் கூறப்பட்டிருப் பதுமல்லாமல் பல ஆண்சிங்கங்கள் கூறிப்பரிதவிப் பதும் பொய்யாகாதல்லவா?" என்கிறார். ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தியிருந்து அழுததாம். அப்படிக் கருதிப் பரிதவிக்கும் ஆண்சிங்கங்க ளுக்குப்பதில் சொல்வது என்னைப்போன்ற தம்பி ழணங்குகளுக்கு அழகல்ல. உண்மையில் தேவ பக்தி நிறைந்த ஆடவரால் பெண்கள் போற்றப் பட்டுவருவது யாவரும் அறிந்ததே. அதுபற்றி நான் விளக்கிரிப்பது அனுவசியம்.

மேலும் பெண்கள் ஆண்களைப்போல் மன அடக்கம் அற்றவர்களல்ல. அதனாலேயே ஆண் கள் மனைவி இறந்ததும் சீக்கிரம் மறுவிவாகம் செய்துகொள்ள இச்சையுறுகின்றனர். பெண்ணை புருஷன் இறந்து விட்டால் சகுந்தலையும் அவளையே நினைந்து அன்ன ஆகாரமின்றி உருகு கிறாள். அதனாலே கற்பு எவ்வளவு தொகைப் பணம் உடைய பெண்ணும் மறுவிவாகம் செய்ய உடன்படுவது அருமையில் அருமை. இது ஒன் றிலிருந்தே பெண்களது தியாகமும் மன அடக் கமும், அன்பும், கருணையும், பொறுமையும் எத் தன்மையது எனவிளங்கிக் கொள்ளலாம். மனச் சாட்சி பொய்பகராது. "கந்துகமதக்கரியை வசமா நடத்தலாம்." என்ற தாயுமான சுவாமி கள் பாடலின் ஈற்றடியை நினைந்து பார்த்தால் மனதை அடக்குவது எவ்வளவு கஷ்டமென்பது புலப்படும். இந்தப்பாடல் முழுதும் எழுதினால் விரியுமென்றஞ்சியே அத்துடன் நிறுத்தியுள் ளேன். புருடனை இழந்து மறுவிவாகம் செய்து கொள்ளாமலிருக்கும் நம் சகோதரிகள் தம் வாழ் வில் எத்தனையோ கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டி நேரிடுவது உண்மையே. அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட ஆண்சிங்கங்கள் ஏதும் உரிமை வழங்கினால் அறிவுடை உலகம் பெரிதும் போற்றும்.

வீண்விதண்டா வாதக்கடிதங்களுக்கு வழிகா ட்டி இடமளிக்கமாட்டாளென்ற தங்கள் வாக்கி யத்திற்கு அஞ்சி இத்துடன் முடிக்கிறேன். இத ற்கு இடமளித்து உதவினால் பெரும் உபகாரமாயி ருக்கும்.

இங்ஙனம்
தமிழனங்கு.